
# இறையியல் கோலங்கள்

வடிவம் 18 மார்ச் 2005 வண்ணம் 1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தை
இரண்டாம் யோவான் பவுல்



நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தை
# பதினாறாம் பெனடிக்ற்



# வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANGAL

Tamil Theological Quarterly


Vol : 18
No : 01
March : 2005

வடிவம் : 18
வண்ணம் : 01
மார்ச் : 2005



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் :**
அருள்திரு : ச. வி. ப. மங்களராஜா

**துணை ஆசிரியர் :**
அருட்தந்தை : சா. பி. கிருபானந்தன்
அருட்தந்தை : ப. ஜோ. ஜெபரட்ணம்
அருட்தந்தை : பி. கிறிஸ்துநாயகம்

**நிர்வாக குழு :**
அருட்சகோ. செ. பிரான்சிஸ் அசிசி
அருட்சகோ. பி. தே. யூட்தாஸ்
அருட்சகோ. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்
அருட்சகோ. எ. எட்வினாதன்
அருட்சகோ. சூ. மில்ரன் தேவராஜ்
அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ

வெளியீடு : புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor :**
Fr. S. V. B. Mangalarajah

**Sub Editors :**
Fr. S. F. Kirupananthan
Fr. P. J. Jebaratnam
Fr. P. Christunayagam

**Administrative Board :**
Bro. S. Francis Assisi
Bro. F. T. Judethas
Bro. J. Jesly Jehananthan
Bro. E. Edwinathan
Bro. S. Milton Devaraj
Bro. A. Christy Ruban Fernando

**Publication :** St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel No.: 021 222 2482, 021 222 7145.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடம் இருந்து ........

02. மனித நேயத்தின் மறுபதிப்பு
திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்
*அருட்சகோ. எ. எட்வினாதன்*

03. விடுதலை இறையியலின் எழுச்சியும், எதிர்ப்புகளும், எதிர் வினைகளும்,
*அருட்தந்தை. சா.பி. கிருபானந்தன்*

04. விடுதலை இறையியலாக்கமும் அது எமக்கு விடுக்கும் அழைப்பும்
*அருட்தந்தை. ஜெயந்தன் பச்சேக்* அமதி

05. விடுதலைக்கு வித்தான திவ்விய நற்கருணை
*அருட்சகோ. ச. நெவின்ஸ் யோகராச்*

06. இவ்விதழின் இறையியலாளர் – 18
*அருட்சகோ. சூ. மீல்ரன் தேவராஜ்*

07. இறைபதம் இளைப்பாற இறைஞ்சி
*அருட்சகோ. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு*

08. திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பற்றிய சில வாழ்க்கைக் குறிப்புகள்

08. **Synopsis**

09. குறுக்கெழுத்துப் போட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

நூற்றுப் புத்துக்கோடி கத்தோலிக்கரது தலைமை ஆயர் மட்டுமல்ல, எஞ்சிய ஏறக்குறைய 80%மான உலக மக்களுக்கும் ஒரு சிறந்த தலைமைத்தவத்தைக் கடந்த 26 வருடங்களுக்கு மேலாக வழங்கியவர் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய திருத்தந்தை 2ம் யோவான் பவுல். இவர் இறைவனடி சேர்ந்தாலும் இவர் நீதிக்காகவும், சமாதானத்திற்காகவும், சிறந்த ஒழுக்கவியலுக்காக வும் குறிப்பாகக் குடும்ப ஒழுக்கத்திற்காகவும் எழுப்பிய குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இயேசு வின் படிப்பினைகளையும் கிறிஸ்தவக் கோட்பாடுகளையும் நிலைநாட்டுவதில் இவர் ஒரு பாறை. மனித நேயத்தை வலியுறுத்துவதிலும் துயருறுவோர்க்கு ஆறுதலளிப்பதிலும் இவர் ஒரு பசும் புற்றரை. இவரது திருப்பணியின் இறுதியாண்டில் கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமான நற் கருணை (2ம் வத். சங். திருச்சபை – 11) யின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியமை இவரது திருப்பணிக்கு மணிமகுடமிட்டது போன்றமைந்துள்ளது.

இவ்விதழை மேலும் விடுதலை இறையியல் பற்றிய சிறப்புக்கட்டுரைகள் அணி செய்கின்றன. இதில் சிறப்பாக விடுதலை இறையியலின் வரலாற்றுப் போக்குச் சிறப்பிடம் பெறுகின்றது. உலக கத்தோலிக்கரின் கனிசமான தொகையினர் வாழும் லத்தீன் அமெரிக்காவில் சமூக அரசியல் பரி மாண வளர்ச்சியின் குழந்தையாகக் கருவாகி உருவான இவ்விடுதலை இறையியல் பல சவால்களைப் பல இடங்களிலிருந்தும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சில வேளைகளில் மார்க்சிஸவாதக் கருத்துக்களின் சாயல் இருந்தது போலத் தென்பட்டதாலும் பலப்பிரயோகத்தையும் சிலவேளை களில் வன்முறையையும் அனுமதிப்பதுபோலத் தென்பட்டமையாலும் வத்திக்கான் இவ்விடுதலை இறையியல் மட்டில் கயிற்றின் மேல் நடப்பது போல ஒரு பணியைக் கொண்டிருந்தது. எனவே வத்திக்கான் ஒடுக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாலும் விடுதலை இறையியல் மட்டில் மிகவும் எச்சரிக்கையுடனே தான் செயல்பட்டது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இந்த விடுதலை இறையியல் ஏற்படுத்திய அலை கண்டம் கடந்து ஆபிரிக்க ஆசிய நாடுகளுக்கும் சென்று அங்குள்ள நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் பொருத்தமானதொரு இறையியலைத் தோற்றம் பெறச் செய்தது.

எங்கள் அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் யதார்த்த நிலைகளையும் நோக்கும் போது, விடுதலை இறையியல் ஒன்று இங்கும் அடிமட்டத்திலிருந்து உருவாக வேண்டும். கிறிஸ்து எவ்வாறு இருக்கிறார் என்பது மட்டுமல்ல கிறிஸ்து எனக்கு இங்கு இந்த மண்ணில் இப்போது என்னவாக இருக்கிறார் என்ன சொல்கிறார்? என்னும் சிந்தனைகளைத்தூண்டுவதாக இந்த இறையியல் உருவாக வேண்டும்.

நற்கருணை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருந்தாலும் முழுமனித விடுதலையையே அது அடிநாதமாகக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு விடுதலைப் பயணங்கள் முழுமனித விடுதலைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. நற்கருணை விருந்து இவ் விடுதலைப் பயணத்தில் எமக்கு வேண்டிய பயண உணவு.

வாசித்துப் பயன் பெறுவோம்.

எங்கள் புதிய திருத்தந்தை புனித பேதுருவின் வழி 265வது வாரிசு 16ம் பெனடிக்ற் முழு மனித விடுதலையை நோக்கி, திருச்சபை எனும் கலத்தை வழிநடத்திச் செல்வாராக.

அன்புடன்
S.V.B. மங்களராஜா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தின் மறுபதிப்பு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்

அருட்சகோ. எ. எட்வினாதன்

## முன்னுரை :



"என் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்" என்ற இயேசுவின் கட்டளைக்கு இணங்கி, புனித பேருவின் வாரிசாகப் பணி ஏற்று, கத்தோலிக்க திருச்சபையின் நிகரில்லா தலைவராக, கடந்த 26 வருடங்களுக்கு மேலாக திருச்சபையை வழி நடத்தி வந்த எம் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் பணி வாழ்வை பலரும் பல்வேறு கோணத்தில் அணுகுவர். போரும், பிளவுகளும், அநீதிகளும் நிறைந்த, கடந்த நூற்றாண்டின் தலைசிறந்த மனிதனாக திகழ்ந்துள்ளார். நாடு, மதம், மொழி, இனம், சாதி என்ற நிலைகளில் பிரிவினைகள், கருத்து வேறுபாடுகள் தோன்றி, அழிவின் பாதையிலே சென்று கொண்டிருக்கும் இந்த உலகின் மத்தியில் வாழ்ந்து, மனித மாண்பு சிதைந்தபோது திருத்தந்தையின் குரல் நீதியின் குரலாக ஒலித்து மனித நேயத்தை நேசித்த உத்தம புருஷராக, விடுதலை வீரராக திகழ்ந்தவர் தான் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஆவார். இவ்வகையில் திகழ்ந்த நம் திருத்தந்தை திருச்சபையின் நிகரில்லா ஆன்மீக தலைவர் மட்டுமல்லாது கோடான கோடி கத்தோலிக்க விசுவாசிகளின் தனிப்பெரும் தலைவராகவும், அதிகாரம் கொண்டவராகவும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பம் விரட்டியது - கலைந்து விடவில்லை

உலக சரித்திரத்தின் முதலாம் உலகப்போர் ஏற்படுத்திய அழிவின் வடுக்கள் மறையுமுன் போலந்து - போல்ஸ்விக் போர் (1919 - 1920) இடம் பெற்ற காலப்பகுதியான 1920ம் ஆண்டு மே மாதம் 18ம் நாள் போலந்து தேச கராக்கோவ் நகர் வடோவைஸ் கிராமத்தில் பிறந்த திருத்தந்தை இளமை முதல் எளிமையை நேசித்தவராக, துன்பத்தை தன்னுடைய சொந்த வாழ்விலே அதிகம் அனுபவித்தவராக வாழ்ந்து வந்தார். தன் 9ஆவது வயதில் தாயை இழந்த சேயாக வாழ்ந்த திருத்தந்தை தொடர்ந்து தன் ஒரே சகோதரனையும், இறுதியாக தன்னுடன் உறவென்று சொல்லிக்கொள்ள இருந்த தந்தையையும் இழந்தார். உயர்நிலைப் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்தவருக்கு இவ்விழப்பு கவலையை ஏற்படுத்திய போதும், "கடவுளின் திருவுளம்" என்று உணர்ந்து; வேதனையையும், சோதனையையும் வாழ்க்கையின் சவாலாக ஏற்றாரே தவிர துன்பமாக மாற்றியதில்லை.

"கடவுளின் திருவுளம்"
என்று உணர்ந்து;
வேதனையையும்,
சோதனையையும்
வாழ்க்கையின் சவாலாக
ஏற்றாரே தவிர
துன்பமாக
மாற்றியதில்லை.

1939இல் ஜேர்மனிப் போர் காரணமாக கல்வி இடைநிறுத்தப்பட்டதால், தன் குடும்பத்தின் வறுமை நிலையை போக்குவதற்காக, கல்லுடைக்கும் சுரங்க ஆலைக்கு வேலைக்குச் சென்றார். அங்கு பாரிய கற்களை கையால் உடைக்கும் வேலையையும், இன்னும் பெரிய கற்களை தோள்மேல் சுமந்து செல்லும் பணியையும் மகிழ்வுடன் செய்து வந்தார். பின்னர், இரசாயன கலவையை நீரிலிட்டு நீரைச் சுத்திகரிக்கும் இரசாயனத் தொழிற்சாலையிலும் கஷ்டப்பட்டு வேலை செய்தார். இக்காலப்பகுதியில் விபத்துக்களை சந்தித்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறும்வேளையில், மறைப்பணி வாழ்வுக்கான எண்ணம் இவர் மனதில் இளையோடத் தொடங்கிவிட்டது.

மறைப்பணிக்கு முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்த திருத்தந்தை தன்னுடைய பணிவாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் துன்பத்தை அனுபவித்தவர். "மனிதன் இறைவனை அடைய இருள் வழியேயும் செல்ல வேண்டும்" எனும் விருதுவாக்கை பணிவாழ்வாக கொண்ட திருத்தந்தை துன்பத்தின் வழிநடந்த மனிதன். துப்பாகிச் சூட்டாலும், விபத்தாலும், முதுமையாலும், உடல்நலிவுற்றாலும், இயேசுவின் துன்பத்தில் தானும் பங்கெடுத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக அறிவுத்தெளிவோடு தனது நாளாந்த கடமைகளை நிறைவேற்றி திருச்சபையை வழிநடத்திய ஒப்பற்ற தலைவன். அனைத்து துன்பங்களையும் தானே சுமந்து இறைவனின் பராமரிப்பை உணர்ந்த திருத்தந்தை, மனிதன் எவ்வாறான மனநிலையோடு துன்பத்தை தாங்க வேண்டுமென்பதற்கு தனது வாழ்விலே இறுதி வரை வாழ்ந்து காட்டிய தியாகதீபம்.

## ஏழைகள் - ஒடுக்கப்பட்டவரின் நம்பிக்கை நட்சத்திரம்

நம் திருத்தந்தையின் வாழ்வும் பணியும், தமது சொந்த ஓய்வினையும் இலகு வாழ்வினையும் பார்க்காது தம்மை மறைப்பணிக்கு அழைத்தவரின் மந்தைகளின் விசுவாசத்தினை பாதுகாக்கும் ஒரே நோக்கத்தினை கருத்தில் கொண்டு, முற்றிலும் தன்னை அர்ப்பணித்தவராக பணி செய்தார்.

"மக்கள் மறைவாழ்வே" தம் வாழ்வு என வாழ்ந்து வந்த நம் திருத்தந்தை ஏழைகள் மட்டில், எளியவர் மட்டில் மிகுந்த இரக்கம் கொண்டு ஏழை, எளியோ ருக்காகத் தம்மை நற்செய்தியாக மாற்றியவர்.

தமக்குவரும் புகழ்ச்சிகளையும், இகழ்ச்சிகளையும் கவனியாது "மக்கள் மறைவாழ்வே" தம் வாழ்வு என வாழ்ந்து வந்த நம் திருத்தந்தை ஏழைகள் மட்டில், எளியவர் மட்டில் மிகுந்த இரக்கம் கொண்டு ஏழை, எளியோருக்காகத் தம்மை நற்செய்தியாக மாற்றியவர். மக்களோடு மக்களாய்த் தான் இருப்பதையும் அவர்களுடன் ஆயனாய் பழகுவதையும் தன் வாழ்விலே விரும்பிய திருத்தந்தை இறுதிவரை ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், ஏழைகள் மட்டிலும் ஆழ்ந்த கரிசனை கொண்டு தனது சுற்று மடல்களிலும், பிரசங்கங்களிலும் வலியுறுத்திக் கூறிவந்தார்.

ஏழைகளின் துயர் போக்குவதில் அதிக அக்கறையோடு செயற்பட்ட திருத்தந்தை, மனத்துணிவோடு, அநீதியை சுட்டிக்காட்டி, நீதிக்காக குரல் கொடுத்தார். நாட்டுத் தலைவர்களின் அடக்குமுறையாலும், சர்வதிகாரத்தாலும், பொருளாதாரத்தினாலும் மக்கள் துன்பப்பட்ட வேளையில் அஞ்சா நெஞ்சினராய் மக்களுக்காக குரல்கொடுத்த மாமனிதன். மனித மாண்பு சிதைக்கப்பட்ட போதெல்லாம் திருத்தந்தை மௌனம் சாதிக்கவில்லை. மாறாக எல்லோரும் தனிமனிதனுடைய மாண்பை மதிக்க வேண்டும் என்று கூறி, நீதிக்காக வினா தொடுத்தார். போரினால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட வேளைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெல்லாம், தனது அதிர்ச்சியையும், எதிர்ப்பையும் அரசிற்கும் போரில் ஈடுபட்டவர்களுக்கும் எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல் உலகறிய கண்டனக் குரல் எழுப்பியவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி அவர்களின் விடுதலைக்காக அரசியல் தலைவர்களிடம் நியாயம் கேட்ட தலைவனாக காணப்படுகிறார்.

இது மட்டுமல்லாமல் சமய விடுதலை, திருச்சபை ஏனையவர்களின் சிந்தனைக்கு இடமளித்தல், செயற்பாடு, பேச்சுரிமை போன்ற விவாதங்களில் தனது கருத்தை உறுதியுடன் எடுத்துக் கூறியவர். அரச மத வேறுபாடு தவறான செயல் எனக் கண்டனம் செய்த திருத்தந்தை அரச மதச் சுதந்திரம் வழங்க மறுப்பதை துணிவுடன் எடுத்துரைத்து, தனி மனிதனின் சுதந்திரத்தை மதிக்க வீரத்துடன் உழைத்த நம்பிக்கை நட்சத்திரம்.

## ஆன்மீகப் பயணங்களும் - சமாதான முன்னெடுப்புக்களும்




இயேசு தம் சீடர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்....." (மாற் 16:15) என்பதற்கொப்ப, புனித பேதுருவின் வழி வந்த கிறிஸ்துவின் பிரதிநிதி என்னும் கடமை உணர்வோடும் பணிபுரியும் நோக்கோடும், தம் மந்தைகளை அறியும் மேய்ப்பனாகவும், ஆயர்களோடும், அரச பிரதிநிதிகளோடும், அவலப்படும் மக்களைத்தேடி, அவர்கள் துயர் நீக்கும் காவலனாக பல பிரயாணங்களை மேற்கொண்டார் எம் திருந்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர். 'திருச்சபை உறுப்பினர்களை மட்டும் காப்பது நம் கடமை அல்ல, மாறாக இறைவனை நாடும் சகலரையும் காக்க வேண்டியது நம் பொறுப்பு' எனக் கூறும் நம் திருத்தந்தை நற்செய்திப் பணியில் பணிவு, கனிவு, தெளிவு, உறுதி என்பவற்றை நிலை நாட்டினார்.

திருத்தந்தையிடம் தன்னம்பிக்கை இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைபராமரிப்பிலே நம்பிக்கை கொண்டவராக செயற்பட்ட அதே வேளை தாம் நம்பியிருந்த இறைவனின் பராமரிப்பு தமது பயணங்களின் ஒவ்வொரு நிகழ்விலும் காணப்பட்டதை இவர் நன்கு உணர்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆண்டுகளாக திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே பல மோதல்கள் நடந்த நாடுகளுக்கெல்லாம் பயணங்களை மேற்கொண்டபோது இறைவனுடைய வல்லமை அவரோடு செயலாற்றுவதை கண்டு கொண்டார். பிறருக்கு "அன்பு காட்டுதல்" என்ற கிறிஸ்தவ கோட்பாடுகளின் அடிப்படையில் இன, மத வேற்றுமையின்றி மிகத்துணிவுடன் இவர் மேற்கொண்ட பயணங்கள் பலருடைய மனங்களில் "பசுமரத்து ஆணிபோல்" பதிந்துள்ளன.

'அமைதியையும், அன்பையும்' பரப்ப உலகில் 120க்கும் மேற்பட்ட நாடுகளுக்குச் சென்று, ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு மன்னித்து வாழ உலக மதங்கள் அனைத்திற்கும் அழைப்பு விடுத்த திருத்தந்தை 2001ஆம் ஆண்டு இஸ்லாமியரைச் சந்தித்து மொகமதியர் பள்ளிவாசல் சென்று காலாதி காலமாகத் திருச்சபை வரலாற்றில் விட்ட தவறுகளை ஏற்று அவற்றிற்காக மன்னிப்புக் கேட்ட நிகழ்வு எல்லோர் மனங்களையும் ஆழத்தொட்டது.

"மன்னிப்பின்றி நீதியில்லை, நீதியின்றி சமாதானமில்லை" என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த எம் திருத்தந்தை, "எம் பகைவரையும் மன்னித்து அன்புசெய்"

"மன்னிப்பின்றி நீதியில்லை, நீதியின்றி சமாதானமில்லை" என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த எம் திருத்தந்தை, "எம் பகைவரையும் மன்னித்து அன்புசெய்" என்ற இயேசுவின் போதனைக்கேற்ப தன்னை துப்பாக்கியால் சுட்ட முகமட் அலி அக்காவை மன்னித்து தன் சகோதரனாக ஏற்றுக் கொண்டார். உலகத்திலே சமாதானத்தை நிலைநாட்ட அனைத்து சமயங்களும் சமாதானத்தின் கருவிகளாக திகழ வேண்டும் என தனது 36வது உலக சமாதான தினச் செய்தியாக வெளியிட்டார்.

திருத்தந்தையின் சர்வ மத யாத்திரைகள் ஒவ்வொன்றும், எல்லா மக்களிடமும் சமூக நீதி, சமாதானம், சுதந்திரத்தை பேணி வளர்க்க அழைப்பு விடுத்ததாக அமைகின்றது. மேலும், பல வருடங்களாக ராஜதந்திர தொடர்பின்றியிருந்த நாடுகளுக்கிடையே உறவை ஏற்படுத்தி, ஒற்றுமையை நிலைநாட்டியவர். நாட்டுத் தலைவர்கள், தம்மிடையேயுள்ள பகைமை உணர்வுகளை களைந்து நாடுகளுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்த அயராது உழைத்த திருத்தந்தை சமாதானத்தின் தூதுவனாக போற்றப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, கிறிஸ்தவ மதத்தின் அனைத்து பிரிவினரிடையே மட்டுமல்லாமல், அனைத்து மதத்தினர் இடையிலும் நல்லிணக்கத்துக்காகப் பாடுபட்டார். அந்த அளவில் உலகில் அனைத்து மதத்தினராலும் அவர் மதிக்கப்பட்டார். வத்திக்கான் நகரில், இவருடைய மாளிகைக் கதவுகள் அனைவருக்கும் திறந்திருந்தன. உலகின் பல நாடுகளின் தலைவர்கள் வத்திக்கான் சென்று அவரைச் சந்தித்துள்ளனர். இவருடைய பணியால் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது என்றாலும் அவரது குரலுக்கு உலக நாடுகளில் செல்வாக்கு இருந்ததை இவருடைய பயணங்கள் மூலமாக துலங்குகின்றது.

## தொலைநோக்குப் பார்வை அவருக்கேயுரியது

பல வழிகளில் பணி செய்த போதிலும் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் திருச்சபையை வழிநடத்திய திருத்தந்தையர்களில் தூர நோக்குடன் செயற்பட்டவராக காணப்படுகின்றார். இவருடைய ஒவ்வொரு செயற்பாட்டிலும் இலட்சியம், எதிர்கால திருச்சபை என்பன துலக்கமாக தென்பட்டது. இவருடைய ஆட்சிக் காலத்தில், திருச்சபையின் உயர்பீட ஆணைக் குழுக்களைப் புதுப்பித்துப் புத்தூக்கமும், புதிய வழிமுறைகளில் அவை செயற்பட வழிசமைத்துக் கொடுத்தது இதற்கு சான்றாக அமை கின்றது.

நவீன காலத்திலே, திருச்சபைக்கு எதிரான பல சவால்கள் எழுந்த வேளைகளிலெல்லாம், அஞ்சா நெஞ்சுடன் கண்டித்துக் கூறிய, தயங்காத மாமனிதர். திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை நம்பிக்கையையும், அறநெறியையும் சார்ந்தவற்றை வரையறுத்துக் கூறும்போது தமது பணிப் பொறுப்பு காரணமாக வழுவா வரத்தைப் பெற்றுள்ளார் என 2ம் வத்திக்கான் சங்க திருச்சபை எனும் கொள்கைத் திரட்டில் எண் 25 குறிப்பிடுவதற்கேற்ப தன்னுடைய படிப்பினைகளை உறுதியுடன் எடுத்துக் கூறினார்.

திருச்சபையின் படிப்பினைகளுக்கும் இறை விசுவாசத்திற்கும் எதிராக எழுந்த கருத்துக்களை எதிர்ப்பதில் தயங்காது, உறுதியுடன் செயற்பட்ட திருத்தந்தை, மனித வாழ்வின் புனிதத்துவத்தை கருத்தில் கொண்டு அப் புனிதத்துவத்திற்கு முரணானவற்றைத் தனிமனிதனாக எதிர்த்து நின்று திருச்சபையை வழிநடத்தினார். சிறப்பான விதத்திலே கருவறையை கல்லறை யாக்கும் கருக்கலைப்பு, ஒரே பாலின திருமணம், மனித குளோனிங் ஆராய்ச்சி, பெண்களைக் குருக்களாக நியமிப்பது போன்றவைகளை வன்மை யாக கண்டித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பணியின் போது தமது இலக்கினை மட்டும் கருத்தில் கொள்ளாது எங்கெல்லாம் தேவையிருந்ததோ அங்கெல்லாம் தாமாக சென்று தரிசித்து, ஊக்கமூட்டி, விசுவாசத்திலும், ஆன்மீகத்திலும் உறுதியளித்தது மட்டுமல்லாது, நாடுகளுக்கிடையே சமாதானம் நிலவ வலியுறுத்தினார். ''இந்த உலகத்திலே வன்முறைக் கலாச்சாரத்தை அழித்து அன்பின் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும்'' என்று அணையாத தாகம் கொண்டவராக, அனைத்து தரப்பினரையும் சமாதானத்திற்காக ஒத்துழைக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். திருத்தந்தையின் இந்த அழைப்பின் மகத்துவம், அவரது இறுதிச் சடங்கு வத்திக்கானில் நடைபெற்றபோது, பல ஆண்டு காலமாக எதிரிகளாக இருந்த நாட்டுத் தலைவர்கள் ஒன்றாக பங்குபற்றியது எல்லோர் மனங்களையும் கவர்ந்த ஓர் விடயமாகும். இது மட்டுமல்லாமல், முற்றிலும் தியாகத்தையும் அன்பையும், பிறரன்பையும் உலகம் முழுவதும் விதைத்த திருத்தந்தை மக்களின் நல் வாழ்வை கருத்திற் கொண்டு, பல சுற்றுமடல்கள், போதனைகள், படிப்பினைகள் மூலமாக மக்களை நல்வழிப்படுத்தி, பலகோடி மக்களின் தலைவனாக முன்மாதிரியுடன், எதிர்காலத் தேவைகளையுணர்ந்து வாழ்ந்து சென்றுள்ளார்.

"இந்த உலகத்திலே வன்முறைக் கலாச்சாரத்தை அழித்து அன்பின் கலாச்சாரத்தை அன்பின் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும்"

## இறுதியாக

இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிற தாய் திருச்சபையில் பலருடைய சாட்சிய வாழ்வு வேரோடிக் கிடந்தாலும், உலகில் வாழும் எல்லா மனிதர்களிடமும் இனம், மதம், மொழி, பேதம் இவைகளையெல்லாம் கடந்து, இயேசுவின் வாழ்வை முன்மாதிரிகையாக கொண்டு கிறிஸ்தவத்தையும், அன்பையும், தியாகத்தையும், ஒற்றுமையையும் இந்த பூமியிலே ஆணித்தரமாக வேரோடச் செய்தவர் நம் திருத்தந்தை.

துன்பங்களை கண்டு துவண்டு போகவில்லை, சவால்களிலிருந்து தப்பி ஓட முயலவில்லை. மாறாக செபத்திலே நிலைத்திருந்து, இறைபராமரிப்பை நன்கு உணர்ந்தவராக, இறுதிவரையும் வாழ்விலே இறைவனுக்கு சான்று பகர்ந்தார். உயிராபத்தை சந்தித்த வேளையிலும், பகைவனையும் மன்னித்து அன்புக்கு வடிவம் கொடுத்தவர். எதிர்காலத் திருச்சபையின் நலனை கருத்திற் கொண்டு, துணிகரமாக தன்னுடைய பணியினை முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெடுத்துச் சென்றவர். தாழ்மையும், ஏழ்மையும், அன்பும், பணியும் கிறிஸ்தவ பண்புகள் என்பதை வாழ்வின் பல்வேறு நிலைகளூடாக எடுத்துக் கூறி, அதனை தன் வாழ்விலே வாழ்ந்து காட்டியவர். இவ்வாறாக மக்களுடனான தனிப்பட்ட அணுகு முறைகளும், இறையுறவின் ஒன்றிப்பும், முழுமையான அர்ப்பணிப்பும் அனைவரையும் அரவணைக்கும் கரமும், பணியிலே அவர் கொண்டிருந்த அணையாத தாகமும், பார்வையும் அவரது பணிவாழ்விலே மாற்றத்தையும் வெற்றியையும் கொணர்ந்தது. அதனால்தான் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்த திருத்தந்தையின் பணியும், வாழ்வும், வரலாறும் எம்மிடையே நிலைத்து நிற்பது மட்டுமன்றி எமக்கொரு முன்மாதிரியான வாழ்வாகவும் அமைந்துள்ளது.

## துணை நின்ற நூல்கள்

1. சங்க ஏடுகள்

2. பொதுவுடமைப் போலந்தில் மலர்ந்த பாப்பரசர்
   2ம் அருளப்பர் சின்னப்பர்,
   **Published by Tamil Cathalic Publication - Canada.**

புதிய திருத்தந்தையை
இறையியல் கோல அன்பு
நெஞ்சங்கள் வருக வருக என
வாழ்த்தி வரவேற்கின்றனர்.
உங்கள் பணி சிறக்க
ஆன்மீக, உடல், உள
நலத்துடன் இனிதே என்றும்
வாழ இறைவனை
இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சியும், எதிர்ப்புகளும், எதிர்வினைகளும்.

அருட்தந்தை. சா. பி. கிருபானந்தன்

விடுதலை இறையியல்

இலத்தீன் அமெரிக்க திருச்சபை இறையியல் ரீதியில் விடுதலை இறையியலையும் மேய்ப்புப்பணி ரீதியில் அடித்தள கிறிஸ்தவ சமூகங்கள் என்னும் மாற்றுச் சிந்தனையையும் முன்வைத்தது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளியில் திருச்சபை பழமையிலிருந்து தன்னைப் புதுப்பித்துக் கொண்ட சூழலில் மூன்றாம் உலகத் திருச்சபை தனது அடையாளத்தையும் தனித்துவத்தையும் கண்டுகொண்டது. மூன்றாம் உலகத் திருச்சபை தனது உலகளாவிய இருப்பை உறுதிப்படுத்திய போதிலும் பண்பாட்டு வேர்களைத் தேடும் சுய-பிரக்ஞையில் ஈடுபடத் தொடங்கியது. காலனித்துவகால மறைபரப்பலின் போது திரிதந்து பொது சங்கத்தின் (Council of Trent) பின்னாலான மாற்றுச் சீர்திருத்த லைபிரிய (Portugal and Spain) மாதிரிகளே மூன்றாம் உலகில் நாட்டப் பட்ட கத்தோலிக்கத் திருச்சபையாகும். இவ் வரலாற்றுப் பின்புலத்தில் மூன்றாம் உலகிலுள்ள திருச்சபையில் ஏற்பட்ட முதிர்ச்சியாகவே விடுதலை இறையியலை வர்ணிக்க வேண்டும்.

## புதிய செல்நெறியும் சுயவிமர்சனமும்

காலத்தின் வளர்ச்சிக்கும் தேவைக்கும் ஏற்பத் திருச்சபை தன்னைப் புதுப்பித்துப் புதிய செல்நெறியை வரையறை செய்யும் சுயவிமர்சிப்பாகவே இரண்டாம் வத்திக் கான் சங்கம் அமைந்தது. சட்டவாக்க மொழிப்பிரயோகத்தை விடுத்து கிறிஸ்தவ ஒன்றிப்பின் மொழியில் உரையாடிய இச்சங்கம் திருச்சபையின் வரலாற்றில் ஒரு திசைதிருப்பல் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை என்னும் மறைக்கோட்பாட்டு அறிக்கையில் 'இறைமக்கள்' எனும் வரையறையைக் கத்தோலிக்கத் திருச்சபைக்கு மட்டும் என்ற குறுகிய தன்மையை விடுத்து தன்னை உலக மக்களினத்தின் பணியாளனாகவும் விவிலியத்தின் பின்னணியிற் புதிய தோற்றத்தினைக் கொடுத்தது. இறைவனோடு உள்ள நெருங்கிய உறவையும் மனிதகுலத்தின் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் கருவியாகவும் அருட்சாதனமாகவும் திருச்சபை தன்னை வரையறை செய்து கொண்டது. கிறிஸ்துவின் ஒரே உண்மை திருச்சபை பேதுருவழி வருபவராலும், அவரோடு ஒன்றித்திருப்பவர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்கத் திருச்சபையில் உளது எனத் தாழ்மையாக அறிவித்தது. 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற இறுதிக் கொள்கைத் திரட்டில் திருச்சபை உலகின் மத்தியிற் பணிபுரிய அருள் அடையாளமாகவுள்ளதுடன் அதன் ஏக்கமும் கவலையும் திருச்சபையின் ஏக்கமாகவும் கவலையாகவும் கூறியது.

> கிறிஸ்துவின் ஒரே உண்மை திருச்சபை பேதுருவழி வருபவராலும், அவரோடு ஒன்றித்திருப்பவர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்கத் திருச்சபையில் உளது எனத் தாழ்மையாக அறிவித்தது.

## இன்றைய உலகில் திருச்சபை

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னாலான திருச்சபையில் மேற்கத்தைய மனபாங்குடைய காலனித்துவ இறையியலை விடுத்து புதிய ஆன்மீக இறையியல் தேடலுக்கு வழிவகுத்ததுடன் பல சூழமைவு இறையியல்கள் உருவாகத்தொடங்கின. டோனல்ட் டோர் இப்படிக் குறிப்பிடுகிறார். "இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்னேற்றிய திருச்சபை தான், மேற்கத்தைய மற்றும் கிழக்கத்தயத்துக்கு மட்டுமல்ல, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவுக்கும் உரியது. எனவே சங்க அறிக்கைகள் மூன்றாம் உலகைக் காத்திரமாக எடுக்கவேண்டும் என்ற உணர்வு உருவானது."[1] மேற்கத்தைய பிற்போக்காளர்களையும், மேற்கத்தைய சார்பா சுயாதீன இறையியலாளர்களையும், சவால் விடுத்து கேள்விக்குள்ளாக்கும் முழுமையான மூன்றும், உலக இறையியல் சங்கத்தில் முகிழவில்லைத் தான். பின்னைய காலங்களில் ஆயர்சங்கத்தின் சிறப்பு அமர்வான இன்றைய உலகில் நீதி என்ற தளத்திலும் மற்றும் விடுதலை இறையியல் ஊடாகவும் மூன்றாம் உலகத் திருச்சபையின் குரல்கள் எழத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகளாவிய திருச்சபை என்ற பார்வை

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திருச்சபையின் அனைத்துப் போதனைகளும் படிப்பினைகளும் ஐரோப்பியப் பின்னணியை முன்னிலைப் படுத்தியே பேசின. சங்க அனுபவம் உலகளாவிய திருச்சபை என்ற புதிய விழிப்புணர்வைக் கொண்டு வந்தது. 2000க்கு மேற்பட்ட ஆயர்கள் முன்னைய மறைபரப்பு தளங்கள் என விவரிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து பங்குபற்றினர். பல்லின மற்றும் பல்பண்பாட்டு பின்னணியும், பல சீர்திருத்த சகோதரர்கள் பார்வையாளராகக் கலந்துகொண்டதும், இன்னும் பல இறையியலாளர்கள் ஆலோசகர்களாகப் பங்குபற்றியதும், திருச்சபைக்குப் புதிய திசைதிருப்பலே. இவ்வனுபவத்தினைத் திருத்தந்தை 23வது யோவான் புதிய பெந்தகோஸ்தாக வர்ணித்தார்.

## இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மூன்றாம் உலகும்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் இறையியலாக்க முறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்கியதோடு இறைவார்த்தையை இறையியலாக்கத்தின் இதயமாக முன்வைத்தது. முன்னைய சமூக மறைக்கோட்பாடுகள் இறைவார்த்தையைவிட அதிகம் இயற்கைச் சட்டத்திலும் புனித அக்குவினா தோமையாரின் பாரம்பரியத்திலும் தங்கியிருந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இன்னும் ஐரோப்பிய பிரச்சனைகளே முன்வைக்கப்பட்டன. தொடர்பாக்க மொழி இலத்தீனாக இருந்ததால் மக்கள் திருச்சபையிற் பார்வையாளர் நிலைக்குப் பின்தள்ளப்பட்டனர்.

> பல இடங்களில் திருச்சபை மக்களோடும் சிறப்பாக ஏழைகளோடும் தன்னை அடையாளப் படுத்துகிறது."

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையில் உருவாக்கிய எதிர் வினையை டொம் அல்பிரிக் ஸரக்பூல் என்ற பெனடிக்ற் சபைத் துறவி பின்வருமாறு ஆராய்கிறார். "உலகம் முழுவதும் சமூகத்திலும், திருச்சபையிலும், சங்கம் பாரிய தாக்கத்தை உருவாக்கியது. கடந்த 20வது ஆண்டு காலத்தில் பார்க்கின்ற போது கத்தோலிக்க திருச்சபையைக் குறிப்பிட்ட அத்திலாந்திக் வட அந்திலாந்திக் திருச்சபையாலும் சமூகங்களாலும் கட்டுப்படுத்த முடியாது. திருச்சபை உண்மையில் அனைத்துலகத்தன்மையானது. மிகவும் உணர்வு பூர்வ வளர்ச்சி ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகின்றது. இலத்தீன் அமெரிக்காவில் புதுப்பித்தலின் முகிழ்ச்சி இடம் பெறுகிறது, பல இடங்களில் திருச்சபை மக்களோடும் சிறப்பாக ஏழைகளோடும் தன்னை அடையாளப்படுத்துகிறது."[2]

## புதிய கண்ணோட்டம்

சங்க நிகழ்வின் போது திருத்தந்தை 23வது யோவான் 'நல்மனம் படைத்தவர்களுக்கு' என்று அனைத்து மக்களையும் விழித்து முதன்முதலில் 'சமூக மறைகோட்பாட்டு' மடல்களை வெளியிடத் தொடங்கினார். மனித உரிமை, சமாதானம் பற்றி திருச்சபை தனது அக்கறையை வெளிப்படுத்தத் தொடங்கியது. அவனியில் அமைதி (Pacem in Terris) என்ற மடலில் பனிப்போர் காலத்தில் இரண்டு வல்லரசுகளுக்கிடையில் போர் நிகழா வண்ணம் திருச்சபை பேசியது. இம்மடல் இரஸ்சிய கிரெம்பிளினில் பலத்த வரவேற்பைப் பெற்ற மடலாகும். சங்கத்தின் பின் திருத்தந்தை 6வது பாவிலு 'ஏழைகள்' என்ற சொல்லாக்கத்துக்கு மாற்றீடாக 'ஏழைநாடுகள்' என சமூக மறைக்கோட்பாட்டு மடல்களில் முன்வைக்கத்தொடங்கினார். இவ்வாறு ஏழை களின் திருச்சபை என்ற கண்ணோட்டம் உருவானது.

இன்றைய உலகில் திருச்சபை எனும் மேய்ப்புப் பணிக் கொள்கைத் திரட்டு உலகிற்கும் திருச்சபைக்கும் உள்ள உறவை வரையறுத்ததுடன், மனித இருப்பை வலியுறுத்தித் தலத் திருச்சபைகளின் கள நிலைப்பாட்டை கருத்தில் கொள்ள அழைப்புவிடுத்ததுடன், தனிமனித ஒழுக்கவியலை வலியு றுத்திச் சமூக பாவம் என்ற கோட்பாட்டை முன்வைத்தது. ஐரோப்பிய புவியியல் யதார்த்தங்களின் இறையியல் (Theology of Earthly Realities), யக்கூஸ் மாரிரையின் (Jacques Maritain), ஒன்றிணைந்த மானிடம், மொனியரின் (Mounier) சமூக ஆள்தன்மை, தெய்-டீ சார்டையினின் (Teilhard de Chardin) முன்னேற்றவியலான கூர்ப்பு, கார்ல் ரானரின் (Karl Rahner) இறையியல், கென்றி டி லூபாக் (Henrti de Lubac) இறையிலாளரின் மறைகோட்பாட்டியலின் சமூகத்தன்மை, ஜிவ்ஸ் கொங்காரின் (Yves Congar) பொதுநிலையினர் இறையியல், செனுவின் (M.D. Chenu) இறையியல் சிந்தனைகள் சங்க மடல்களிற் பிரதிபலித்தன. திருச்சபையில் இந்த மடலினால் உருவான வரலாற்றுத் திருப்பம் விடுதலை இறையியலின் எழுச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் இறையியல்

இரண்டாம் வத்திக்கான் முடிவில் ஐரேரப்பிய பல்கலைக்கழகங்களில் யோன் பப்டிசிஸ்ட் மெட்ஸ் (Johann Baptist Metz) என்ற இறையியலாளரால் உருவாக்கப்பட்ட அரசியல் இறையியல் பாரிய தாக்கங்களை உருவாக்கியது. இரண்டாம் உலகப் போரின் தாக்கமும், நாசிகளால் யூத மக்களின் படு கொலையும் லூத்தரன் சபையின் பொன்ஹோவருடைய "The Cost of Discipleship" சீடத்துவத்தின் விலை என்ற அவரது நூலும், லூத்தரன் சபையில் நாசிகளுக்கான எதிர்ப்பை மனச்சாட்சி சபை என்ற சிறு குழுக்களின் தாக்கங்களும், ஐரோப்பிய இறையியல் மையங்களையே சுய கேள்விக் குள்ளாக்கியது.

## நவகாலனித்துவத்தின் எழுச்சி

நீதி சமாதானத்திற்கு இன்னுமொரு பெயர் என்ற பாரிய நம்பிக் கையைத் திருத்தந்தை 6வது பாவிலு வெளிப்படுத்தியபோதிலும் நீண்ட கால காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளில் நவகாலனித் துவத்தின் எழுச்சியால் "அபிவிருத்தியிசம்" பலத்த தோல்வியைச் சந்தித்துக் கொண்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இன்னும் மூன்றாம் உலக நாடுகளிலும் பாரிய தோல்வியைச் சந்தித்த மக்கள் மத்தியிற் பல ஆயுதக் கிளர்ச்சிகள் உருவானது.

இலத்தீன் அமெரிக்கா புவியியல் ரீதியில் ஐக்கிய அமெரிக்காவின் கொல்லைப் புறம் மட்டுமல்ல, ஐக்கிய அமெரிக்காசார் பல பல் தேசிய கொம்பனிகளின் வேட்டைக்காடாகவும், ஐக்கிய அமெரிக்காவின் இராணுவத் தளபாட விற்பனை மற்றும் சோதனைக் களமாகவும் இருந்தது. இவ்வமைப் புகளை ஊக்குவிக்கக்கூடிய இராணுவச் சர்வதிகாரிகள் ஐக்கிய அமெரிக்கா வினால் தத்தெடுக்கப்பட்டனர். இவ் ஆட்சிகளைத் தக்கவைக்கப் பல ஆயுத யுன்டாக்கள் (Juntas) தனியார் இராணுவமாகக் கட்டியெழுப்பப்பட்டனர். இவ்வரலாற்றுப் பின்புலத்தில் கியூபா சர்வதிகார ஆட்சியைத் தூக்கியெறிந்தது. பனிப்போர் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ அரசியல் பொருண் மிய நெருக்கடியிலிருந்து தப்பிக்க இரஸ்சியசார்பு அரசியற் கட்டமைப்பு உருவானது. கியூபா புரட்சியைத் தொடர்ந்து சே குவரா புரட்சியைத் தொடர பொலிவியா சென்றார். அவரது இறப்பு மர்மமாக இருந்தபோதிலும் அவரது தாக்கம் மூன்றாம் உலக நாடுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத் தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெடலின் முதல் புயபலா வரை

இரண்டாம் வத்திகான் சங்கம் இறையியல் தளத்தில் சுதந்திரமும் ஆக்கத்தன்மையும் கிறிஸ்தவ ஒன்றிப்பு இறையியலில் ஏற்பட வழிவகுத்தது. இது தலத் திருச்சபை இறையியலாளர்களுக்குத் தள மேய்ப்புப்பணிச் சூழ் நிலைக்கு ஏற்ப இறையியலை வகுக்கும் நிலை உருவானது. தென் அமெரிக் கக் கண்டத்தில் வர்ணிக்க முடியாத பாரிய வறுமையும், இராணுவ அடக்கு முறையும் மக்களை வாட்டிய சூழலில் திருச்சபையின் அக்கறையால் விடு தலை இறையியல் கிளம்பத்தொடங்கியது. தென் அமெரிக்க ஆயர் பேரவை 1966 இல் மெடலின், கொலம்பியாவிற் கூடியபோது இரண்டாம் வத்திகான் சங்க மறுமலர்ச்சியை இலத்தீன் அமெரிக்கா திருச்சபையில் செயற்படுத்து வது பற்றிய ஆய்வு நிகழ்ந்தது. இது இலத்தீன் அமெரிக்காவின் அரசியல் பொருண்மிய சமூகநிலை பற்றிய ஆய்வுக்கு உதவியது. கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின் 1979இல் மெக் சிக்கோவிலுள்ள புயபலா நகரில் தென் அமெரிக்கா ஆயர் சங்கம் மீண்டும் கூடிய பொழுது விடுதலை இறையியலின் தாக் கம் அதன் கண்ணோட்டத்தில் எதிர் வினையை உருவாக்கியது. பல இலத் தீன் அமெரிக்க ஆயர்கள் விடுதலை இறையியலை ஆதரித்தனர். பேராயர் ஒஸ் கார் றொமேரோவும் பல குருக்களும் இரத்தம் சிந்தி விடுதலை இறையியலை வளர்த்தனர். ஏழைகளுக்கான தெரிவு, அமைப்பு மயமாக்கப்பட்ட பாவம், அரச பயங்கரவாதம், தேசிய பாதுகாப்பு கோட்பாடு போன்ற பல கருத்தாக்கங்கள் முன்வைக் கப்பட்டன.

பேராயர் ஒஸ்கார் றொமேரோவும் பல குருக்களும் இரத்தம் சிந்தி விடுதலை இறையியலை வளர்த்தனர். ஏழைகளுக்கான தெரிவு, அமைப்புமயமாக்கப்பட்ட பாவம், அரச பயங்கரவாதம், தேசிய பாதுகாப்பு கோட்பாடு போன்ற பல கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

## விடுதலை இறையியல்

மெடலின் தென் அமெரிக்க ஆயர் பேரவையின் பின், பெரு இறை யியலாளர் குஸ்தாவே குத்தியரஸ் அடிகள் விடுதலை இறையியல் என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் விடுதலை இறையியல் போக்கை உருவாக்கி யதுடன் எழுபதுகளில் மிகவும் எதிர்வினையை ஏற்படுத்தியது எனலாம். அறுபதுகளில் உருக்குவெயின் இறையியலாளர் யோன் லுயிஸ் செக்குண்டோ, திருச்சபை தனது பிரதேசங்களில் அரசியல் சமூக பண்பாட்டு நிலைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஏற்ப முன்னெடுப்பை வழங்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டத் தொடங்கினார். ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட இலத்தீன் அமெரிக்கச் சூழலில் விடுதலைக்காக அர்ப்பணித்த ஆண்கள் பெண்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்திலும், நற்செய்தியிலும் சிந்திக்க இந்நூல் முயலுகிறது என்று குஸ்தாவோ குத்தியிரஸ், விடுதலை இறையியல் என்ற நூலை அறிமுகப்படுத்தும்போது கூறுகிறார்.[3] 1960களில் ஆரம்பமான விடுதலை இறையியல் சிந்தனைப் போக்கு யோன் போல் செக்குண்டோ, லொனர்டோ பொவ், அவர் சகோதரன் குளொடியஸ் பொவ், யேன் செபரினோ, செக்குண்டோ கலிலி, லூசியோ கராசா பெனினே, போன்ற கத்தோலிக்க இறையியலாளர்களாலும் எமிலியோ கஸ்ரோ, யூலியா சான்ற அனா, ரூபம் அல்வராஸ், யேசே மஜகுஸ் பெனினொ போன்ற சீர்திருத்த இறையியலாளர்களின் சிந்தனைகளாலும் வளம்பெற்றதுடன் இன்னும் பல இலத்தீன் அமெரிக்க ஆயர்களின் ஆதரவாலும் இறையியல் வரலாற்றிற் புது எழுச்சியை உருவாக்கியது.

## அடித்தளக் கிறிஸ்தவ சமூகம்.

இலத்தீன் அமெரிக்கத் திருச்சபையின் கொம்யுனிடிடாஸ் டி பாஸ என்னும் மேய்ப்புப்பணியியல் முறைதான் **அடித்தள விசுவாச சமூகங்களாகும்.** இலத்தீன் அமெரிக்க திருச்சபையிற் பாரம்பரிய பங்கு அமைப்புக்கள் புவியியல் ரீதியிற் பெரிதாகவும் ஈடுபாடற்றதாகவும் அமைந்ததால் திருச்சபைசார் சிறிய சமூகங்களின் எழுச்சி வலியுறுத்தப்பட்டது. 2ம் வத்திக்கான் சங்கத்தில் உருவான புதிய மேய்ப்புப்பணியியல் அணுகுமுறை மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தலத்திருச்சபைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மறுமலர்ச்சியை உருவாக்கியது. விவிலிய வாசிப்பு, சமூக ஈடுபாடு, பொது நிலையினரின் பங்களிப்புப் போன்றவையால் தலத்திருச்சபை புதிய உத்வேகம் பெற்றது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தி இயக்கத்தின் தோல்வி, வெகுஜன வானொலி சேவைகளின் கட்டமைப்பு, வளர்ந்தோர் கல்விப்பணி போன்ற சமூக அம்சங்களின் பின்னணியே சிறிய குழுக்களின் வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்தது.

> முறைப்படியான பாரம்பரியம் உள்ள உண்மையான தலைமைத்துவத்தால் ஊட்டம் பெற்றுத் திருச்சபையோடு தோழமையான ஒன்றிப்புக் கொண்டுள்ள அடித்தள குழுக்கள்தான் அடித்தள திருச்சபைசார் சமூகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படியான பாரம்பரியம் உள்ள உண்மையான தலைமைத்துவத்தால் ஊட்டம்பெற்றுத் திருச்சபையோடு தோழமையான ஒன்றிப்புக் கொண்டுள்ள அடித்தள குழுக்கள்தான் அடித்தள திருச்சபைசார் சமூகங்கள்(Basic Ecclesial Community) என வரையறை செய்யப்பட முடியும் என 1975இல் திருத்தந்தை 6ம் பாவிலு வெளியிட்ட (Evangelii Nuntiandi) நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றிய திருத்தூது மடலில் குறிப்பிட்டுள்ளார். 1990இல் திருத்தந்தை 2ம் யோவான் பாவிலு எழுதிய (Redemptoris Missio) மீட்பின் மறையறிவிப்பு எனும் சுற்று மடலில் இச் சமூகங்கள் தான் மறை அறிவிப்பின் உந்து சக்திகளாகவும், அன்பின் பண்பாட்டைத் தளமாகக் கொண்டுள்ள சமுதாயத்தின் தொடக்கமாகவும் அமைகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

## செயற்பாட்டில் கிளம்பிய இறையியல்

ஈடுபாடு அர்ப்பணத்தில் பிறந்த அனுபவங்களின் ஆய்வுகளை இறை வார்த்தை ஒளியில் பார்க்கும் செயற்பாடுதான் விடுதலை இறையியல். செயற்பாடுதான் (Praxis) விடுதலை இறையியலின் பின்புலம், அடித்தள கிறிஸ்தவ சமூகங்கள். அதன் தளம் விடுதலை இறையியல் மட்டுமல்ல இறையியல் விடுதலையும் கூட. பெரிய மடாலயங்களிலும் குருமடங்களிலும் மையங்கொண்டு கோட்பாடுகளை (Dogma) மட்டும் வலியுறுத்திய சார்புக் கண்ணோட்டத்தில் விடுதலை இறையியலின் களம் வரலாற்றின் விளிம்பு நிலை மக்களை மையப்படுத்தியது. ஏழைகளுக்கான தெரிவு (Option for Poor) விடுதலை இறையியலின் அச்சாணியாகும்.

ஈடுபாடு அர்ப்பணத்தில் பிறந்த அனுபவங்களின் ஆய்வுகளை இறைவார்த்தை ஒளியில் பார்க்கும் செயற்பாடுதான் விடுதலை இறையியல்.

## எச்சரிக்கைகளும் எதிர்ப்புகளும்.

முதல் எதிர்ப்பாக அமெரிக்க மெதடிஸ்த சஞ்சிகையான 'ரீடர்ஸ் டஜஸ்ட்' தனது எதிர்ப்புக் கட்டுரையை வரைந்தது. பல விடுதலை இறையியல் சார்பான ஆயர்கள் எச்சரிக்கப்பட்டனர். பல விடுதலை இறையியலாளர்கள் ஓரங்கட்டப்பட்டனர். தென் அமெரிக்க ஆயர் சங்கச் செயலரும் தலைவருமான அல்போக்சோ லோபஸ் ருஜுலோ, றொஜர் விக்கமான் பெல்றிய மறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர், முன்னைய பொனவன்ஜர் கோலன்பேர்க் (இவர் முன்னைய மெடலின் இயக்குனர் பின்னர் எல் சல்வடோர் தூணை ஆயர்) தமது எதிர்ப்புகளை வலுப்படுத்தினர்.[4] பல திரிபுவாத விடுதலை இறையியல் நூல்கள் பல வாசகர்களை குழப்பத்தில் ஆழ்த்தின.

## சான்றா பே அறிக்கை

விடுதலை இறையியல், இறையியல் மட்டுமல்ல சமூக இயக்கமும் கூட. இதனால் விடுதலை இறையியல் பல மட்டங்களில் அவதானிப்பைப் பெற்றது. அன்றைய காலக்கட்டத்தில் வெளியுறவுச் செயலராக இருந்த நிக்சன் தனது இலத்தீன் அமெரிக்கப் பயணத்தின் பின் ஐக்கிய அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கு இலத்தீன் அமெரிக்காவில் தோன்றியுள்ள விடுதலை இறையியல் பாரிய எதிர்ப்பாக அமையலாம் என முதலில் எச்சரிக்கை செய்தார். இதற்கு மாற்றீடாக அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.எ. பல அமெரிக்கசார் அடிப்படைவாதிகளை உதவிகள் என்ற போர்வையில் அனுப்பத் தொடங்கியது.

அமெரிக்காவுக்கிடையிலான பாதுகாப்பு அமைப்பு முன்வைத்த சான்ற பே அறிக்கை இக்கருத்துகளை முன்வைத்தது. இக்கால கட்டத்தில் இலத்தீன் அமெரிக்காவின் இன்னொரு நாடான நிக்கராகுவாவில் ஏற்பட்ட புரட்சிக்கு விடுதலை இறையியல் பின்புலத்தில் அடித்தள கிறிஸ்தவ சமூகங்களின் பங்களிப்பு அமெரிக்கசார் சமோசாவின் சர்வதிகார ஆட்சியை முடிவுக் கொண்டுவந்தது. இதன் புதிய அமைச்சரவையில் முற்போக்கு இறையிய லாளராக மிகுல் எஸ்கட்டோ என்ற மேரிநொள் குரு வெளிவிவகார அமைச்ச ராகவும், கவிஞரும், குருவுமான எர்னஸ்டோ கார்தனல் கலாச்சார அமைச்சராக வும், அவர் சகோதரர் இயேசு சபைக் குரு பெர்னாடோ கார்தனல் கல்வி அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர். இந்நிலை மாற்றம் அமெரிக்க பாது காப்புப் துறையை விழித்தெழச் செய்தது. குருக்கள் அரச பதவி வகிக்கத் தொடங்கியதும் வத்திக்கான் உசாரானது.

நிக்கராகுவாவில் எதிர் இராணுவப் புரட்சியை ஏற்படுத்த கென்ரா அமைப்பு சி.ஐ.எ.யால் கட்டப்பட்டது. டொனாலட் ரீகன் ஆட்சியில் இலத்தீன் அமெரிக்க கொள்கைக்கு சான்ற பே அறிக்கை அடிப்படையாக அமைந்தது. ஐக்கிய அமெரிக்க வெளியுறவுக் கொள்கை எதிர்ப்பைத் தொடங்கவேண்டும். இலத்தீன் அமெரிக்காவின் விடுதலை இறையியலாளர் குருக்களால் பாவிக் கப்படும் விடுதலை இறையியல் தனியார் சொத்துரிமை, உற்பத்தி முதலாளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தை மார்க்ஸிட் லெனிஸ்ட் சக்திகள் திருச்சபையை அரசியல் ஆயுத மாக்கி எதிர்ப்பதோடு மத குழுமங்களில் ஊடுருவியுள்ளனர். அதில் கிறிஸ்த வத்தைவிட கம்யூனிசமே அதிகம் என்று அறிக்கை (Sante Fe Document) குறிப்பிட்டதாக யக் நெல்சன் பல்மேயர் Politics of Compassion எனும் தனது நூலிற் சொல்லியுள்ளார்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு அடையாளங்கள் ஐந்தாவது அடை யாளமாக யக் நெல்சன் பல்மேயர் 'Brave New World Order' எனும் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ஆர்ஜன்ரீனா, உருகுவே, சிலி, பாராக்குவே, பிரேசில், பெரு, ஈக்குவடோர், கொலம்பியா, வெனுசுலா, பனாமா, பொலிவியா, கொண்டுராஸ், குவாட்டமாலா, சல்வடோர் ஆகிய இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவ ஜெனரல்களை அமெரிக்க இராணுவம் ஆர்ஜன்ரீனாவில் கூட்டியபோது அமெரிக்க விடுதலை இறையியலையும் முற்போக்குக் குருக்களையும் தமது தேசிய பாதுகாப்புக்கு எதிரானவர்கள் என்று சுட்டிகாட்டினர். விடுதலை இறையியலைக் கம்யூனிச எதிர்ப்போடு சமப்படுத்தினர்.

## வத்திக்கான் எச்சரிக்கை

விடுதலை இறையியல், இறையியல் மட்டுமல்ல சமூக இயக்கமு மாகும். அடித்தள குழுமங்கள் காலப் போக்கில் வெகுஜன திருச்சபையாக (Ecclesia de Populi) மாறலாம் என்னும் பயமும் விடுதலை இறையியல், இறையியலாளர், சமூக ஈடுபாடு, திருச்சபையின் ஆட்சியமைப்பிலும் சிறப்பாக திருச்சபையின் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஏற்பட்ட அழுத்தங்களாலும் பல கம்யூனிச நாடுகளில் துன்புற்ற தலத்திருச்சபைகளின் அனுபவங்களாலும் வத்திக்கான் தனது எச்சரிக்கையை வெளியிட்டது.

காலனித்துவ இறையியல் மையங்கள் விடுதலை இறையியலையும் அதன் செய்முறை வடிவியலையும் எதிர்த்ததோடு இன்னும் குறிப்பாக இது வெறும் சமூகவியல் என்று ஓரங்கட்டியதுடன் தனது பகுப்பாய்வுக்கு மார்க்சிசத்தை பெரிதும் தங்கியுள்ளது என்றனர். மார்க்சிசம் திருச்சபைக்குள் ஊடுருவியுள்ளது என எதிர்ப்பைக் காட்டத்தொடங்கினர். புனித தோமா அக்குவினா தனது இறையியலாக்கத்திற்குக் கிறிஸ்தவரல்லாத அரிஸ்டோட்டி லில் பெரிதும் தங்கியது போலவே எமது சமூகங்கள்பற்றிய பகுப்பாய்வுக்கு மார்க்சிச முறைகளைப் பாவிக்கிறோம் என பதிலளித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வினைகள் உருவாக்கிய புத்துயிர்ப்புகள்

செயற்பாட்டிற் கிளம்பிய இறை தேடல்தான் விடுதலை இறையியல். எனவே இது மடாலயங்களில் தங்களை அந்நியப்படுத்தி வாழும் உயர் குழாமின் சிந்தனையல்ல. மாறாக இது அடித்தள குழுமங்களின் ஈடுபாட்டில் வெடித்துக் கிளம்புகிறது. விடுதலை இறையியலாக்கத்தில் நிபுணத்துவம்சார், மேய்ப்பணிசார், வெகுஜனசார் என்று மூன்று பரிமாணங்கள் உண்டு.[5]

மூன்றாம் உலகநாடுகள் முதலாம் உலக இறையியல் சிந்தனையையே இறக்குமதி செய்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் தலத்திருச்சபைகளிற் சிறப்பாக மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி சிறப்பாக வழிபாடு, இசை, பாடல்கள், பணிமுறை, பணி அமைப்புக்கள், சூழமைவு இறையியலிற் புத்தாக்கத்தை உருவாக்கியதுடன், இலத்தீன் அமெரிக்காவில் கிளம்பிய விடுதலை இறையியல் புதிய செல்நெறிக்கு வளமூட்டியது. விவிலியம் இறைமக்களின் வாழ்வில் மையமாக்கியது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் மூன்றாம் உலகப் பார்வையில் விவிலிய வாசிப்புக்கு வழி சமைத்தது.

**விவிலியம் இறை மக்களின் வாழ்வில் மையமாக்கியது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் மூன்றாம் உலகப் பார்வையில் விவிலிய வாசிப்புக்கு வழி சமைத்தது.**

தலத்திருச்சபைகளின் பணிமுறைகளும் பணி அமைப்புகளும் புதிய பரிமாணத்தைப் பெற்றன. அமைதிப் பணி, மனித உரிமை மேம்பாடு, விழிப்புணர்வு முதியோர் கல்வித்திட்டம், பெண்ணியம், மாற்று வலுவுள்ளோர் புதுவாழ்வு, ஆதி வாசிகள் மேம்பாடு, அகதிப்பணி, புலம் பெயர்ந்தோர் பணி, இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு எனத் தலத்திருச்சபையின் மறை வட்டங்களும், துறவற சபைகளும் மாற்றுப் பணி முறைகளையும் பணி அமைப்புகளையும் உருவாக்கின.

## சூழமைவு இறையியலில் புத்தாக்கங்கள்

மூன்றாம் உலகநாடுகளில் சூழமைவு இறையியலில் புத்தாக்கத்துக்கு விடுதலை இறையியல் கால்கோள் இட்டது. விடுதலைக்குப் பின்னாலான காலகட்டத்திற் கிறிஸ்தவ இறையியல் எனக் கோரும் எந்த இறையியலும் விடுதலை இறையியலின் தனித்துவமான முத்திரையைக் கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என அங்கோலா நாட்டின் லவண்டா ஆயர் எமிலியோ. ஜே. எம். டீ. கார்வாலோ குறிப்பிட்டார்[6]. விடுதலை இறையியலின் பாய்ச்சல் ஆபிரிக்கா தலத்திருச்சபைகளில் கறுப்பு இறையியலாக, கொரியாவில் மிஜுங் பெண்ணிய இறையியலாக, பிலிப்பைன்ஸில் எருமை இறையியலாக, பலஸ்தீனத்தில் ஒலிவ இறையியலாக, இந்தியாவில் தலித் இறையியலாக விரவியுள்ளது. மூன்றாம் உலகின் இறையியலாளர்களின் கூட்டமைப்பு வலுப்பெற்றது.

## தலித் இறையியல்

பிராமணிய சனாதன தர்மத்தால் நீண்ட கால சூழலில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு, இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது மகாத்மா காந்தியால் ஏமாற்றப்பட்டுச் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்ட தலித் மக்களின் மனித மாண்புக்கான போராட்டத்தில் தலித் இறையியல் பிறந்தது. இந்திய இறையியலில் மிகப் பெரும் சாதனை என இந்திய இயையியலாளர் பேராசிரியர் பிலிக்ஸ் வில்பிறட் அடிகள்[7] குறிப்பிடுவது எமது கவனத்தை ஈர்த்துள்ளது. "நாங்களும் மனுசங்கடா" என்ற தலித்தியப் பாடல் இப்போரட்டத்தின் குறியீடு எனலாம்.

## அடித்தள சமூகங்களும் அன்பியமும்

அருள்திரு சீ.யோ. இம்மானுவேலின் அழைப்பின் பேரில் பிறேசிலிய அருள்திரு ஜோசே மரின்ஸ் மற்றும் சகோதரிகளும் இலங்கை வந்து தேவத்த, அம்பிட்டியா, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தல் கருத்தரங்கை நடத்தினர். ஆசிய ஆயர் பேரவை மேய்ப்புப் பணிமுறையில் சிறு குழுமங்களில் தொடக்கத்திற்கு 'அசிப்பா' என்ற செயற்திட்டத்தை முன்வைத்தனர். 'அசிப்பா' என்ற சொல்லாடலே 'அன்பியம்' என மொழி படுத்தப்படுகிறது.

## விடுதலை இறையியலும் ஈழத் தமிழர் போராட்டமும்.

ஈழ தமிழ் போராட்டமும் விடுதலை இறையியலும் முகிழ்ந்தது கிட்டத்தட்ட ஒரே காலகட்டம் எனலாம். 'விடுதலை இறையியல்' யாழ் பல்கலைக் கழகத்தை மையங்கொண்ட மனிதன் குழுவின் "மனிதன்" பத்திரிகை ஊடாக எமது மண்ணில் பரவத் தொடங்கியது. திருநெல்வேலி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆச்சிரமத்தைத் தளமாகக் கொண்டு சுவாமி ஜெயசீலனின் வழிகாட்டலில் இயங்கிய இக்குழு விடுதலை இறையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக ஈழத் தமிழர் போராட்டத்தை வெகுஜனமாக்குவதில் பலத்த ஈடுபாட்டைக் காட்டியது. 'மனிதன்' பத்திரிகையின் மறைந்த ஆசிரியர் திரு. அ. விமலதாசன் வென்னப்புவில் நடந்த மூன்றாம் உலக இறையியலாளரின் இரண்டாவது மகாநாட்டிற் பேராளராகக் கலந்து கொண்டு ஈழத் தமிழர் போராட்டம் பற்றிய குழுக்கவிதையை உருவாக்கி பேராளர்களோடு பாடினார். இன்று விடுதலை இறையியலின் தாக்கத்தை தமிழ் ஈழ மக்களின் விடுதலைச் செயற்பாடுகளிலும், பணிமுறைகளிலும், வழிபாட்டுப் பாடல்களிலும் அவதானிக்கலாம்.

## இறுதியாக

'நான் பசியாயுள்ளவர்களுக்கு உணவு கொடுத்தால் என்னைப் புனிதன் என்கிறீர்கள், நான் இவர்கள் ஏன் பசியாய் உள்ளார்கள் எனக் கேட்டால் என்னை கொம்யூனிஸ்ட் என்கிறீர்கள்'

என்ற மறைந்த பேராயர் டொம் கெல்டா கமறாவின் வார்த்தைகள் அவரது ஈடுபாட்டையும் விடுதலை இறையியலையும் பிரதிபலித்தது.

**'நான் பசியாயுள்ளவர்களுக்கு உணவு கொடுத்தால் என்னைப் புனிதன் என்கிறீர்கள், நான் இவர்கள் ஏன் பசியாய் உள்ளார்கள் எனக் கேட்டால் என்னை கொம்யூனிஸ்ட் என்கிறீர்கள்'**

## அடிக்குறிப்பு


1 D. Dorr, *Option for the Poor, A Hundred Years of Vatican Social Teaching,* Dublin.
2 Caardinal Bernaddin, *Forward Vatican 11 Revisted*
3 Gustavo Gutierrez, *A. Theology of Liberation*
4 Learnardo Boff, Clodovis Boff, *Introducing to Liberation Theology*
5 Learnardo Boff, Clodovis Boff, Ibid
6 T Balasurya (Ed.), Voice of Third World Theology
7 Felix Wilfred, Indian Theology- Retrospect and Prospect, A Socio-Cultural Perspective, in Encounter with Words





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இறையியலாக்கமும் அது எமக்கு விடுக்கும் அழைப்பும்

அருட்தந்தை S.P. ஜெயந்தன் பச்சேக் அமதி

திருச்சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் தியான, சந்நியாச, மடாலயப் பாங்கான ஆன்மீகம் உலகத்திலிருந்து ஒதுங்கி வாழும் ஒரு துறவு வாழ்வை ஆத்ம தூய்மைக்கு வழியாக முன் மொழிந்தது. 12ஆம் நூற்றாண்டு தொடக்கம் துறவு வாழ்வின் அநுபவங்களைப் போதனை, சேவை போன்ற ஊடகங்கள் வழியாக உலகத்தோடு பகிர்ந்து கொள்ளுகின்ற ஆன்மீகம் மொட்டவிழ்த்தது. தியானத் துறவும் சேவைத் துறவும் கைகோர்த்து நடந்தன. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தியானத்துறவும் சேவைத்துறவும் மறை போதகத் துறவாக விரிவு கண்டது. காலத்தின் தேவையான மறை போதக ஆன்மீகம் புனித லொயலா இஞ்ஞாசியார் போன்றோரின் மறைபோதக முன்னெடுப்புக்களாற் சிறப்பான முறையில் வீறுகொண்டது. 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் அண்மைக் காலங்களிலெழுந்த பொதுநிலையினரின் இறையிய லாக்க முனைப்புக்களினால் மதப் பண்புகளையும் கிறிஸ்தவர்களின் சமூகக் கண்ணோட்டத்தையும் பற்றிய ஆய்வுகளும் வெளிவரத் தொடங்கின.

மானுடம் சார் அணுகு முறையின் வெளிச்சத்தில் இறை வெளிப் பாட்டையும் குறிப்பாக இயேசு நிகழ்வையும் விளக்கம் கொள்ளும் பாங்கு முனைப்புப் பெற்றது. நற்செய்திகள் ‘இறைவனையும்’ கூடவே ‘மனிதனையும்’ விளக்கிக் காட்டுகின்ற தனிப்பெரும் வெளிப்பாடாகவே கோடிட்டுக் காட்டப் பட்டன. கா(ர்)ள் பா(ர்)த் போன்றோர் மனிதமைய இறையியல் விளக்கப் புலத்தினின்று ‘இறைவன் மனிதனானதனால் மனிதனே யாவற்றினதும் அளவு கோல்’ எனக் கூறுமளவிற்குச் சென்றனர். கொங்கா(ர்) போன்ற கத்தோலிக்க இறையியலாளர்கள் ‘ஒட்டுமொத்த நோக்கில் விண்ணுக்குரியவற்றைப் பற்றி இருந்த விளக்க அழுத்தம் காட்டப்பட வேண்டும்’ என்பர். மொத்தத்தில் இறையியல், படைத்தவரைப் பற்றி மாத்திரம் அல்லாமற் படைப்பைப் பற்றியும் தொட்டறிய இஷ்டம் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆம் வத்திக்கான் சங்கமும் இவ்விறையியலாக்கத்தை இறுக்கமாக விதந்துரைத்தது. விசுவாசியின் வாழ்க்கை நிலை களுக்குள்ளிருந்தே அவனை விசுவாசப் பயணத்தில் முன்னேற அழைத்தது. மனிதனை அவனது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், சவால்கள், வெற்றிகள், தோல்வி களினுடனும் எடுத்தாய்ந்து இயேசு நிகழ்வின் ஒளியில் அவனது விசுவாசப் பாதைக்கு வெளிச்சம் தந்தது.

2ஆம் வத்திக்கான் சங்கமும் இவ்விறையியலாக்கத்தை இறுக்கமாக விதந்துரைத்தது. விசுவாசியின் வாழ்க்கை நிலைகளுக்குள்ளிருந்தே அவனை விசுவாசப் பயணத்தில் முன்னேற அழைத்தது. மனிதனை அவனது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், சவால்கள், வெற்றிகள், தோல்விகளினுடனும் எடுத்தாய்ந்து இயேசு நிகழ்வின் ஒளியில் அவனது விசுவாசப் பாதைக்கு வெளிச்சம் தந்தது. 2ஆம் வத்திக்கான் பொதுச் சங்கம் முடிந்த சூட்டோடு கூட்டப்பட்ட இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் மாநாடு விடுதலை இறையியலுக்குக் கட்டியம் கூறி நின்றது. காத்திரமான முன் மொழிவுகளையும் விதந்துரைகளையும் வழங்கி இறையியலில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. 70களின் ஆரம்பத்தில் குஸ்டாவோ குட்டியரஸ் போன்ற இலத்தீன் அமெரிக்க இறையியலாளர்கள் விடுதலை இறையியலைத் தர்க்க ரீதியாக முன் வைப்பதில் முனைந்து வெற்றியும் கண்டனர்.

**'கிறிஸ்து தன்னிலே எவ் வாறு இருக்கிறார்'** என்பதில் அல்லாமல் அதே கிறிஸ்து **'நமக்கு என்னவாக இருக்கின்றார்'** என்பதே வாதக் கருப் பொருளாக கவனமீர்த்தது. சாரம் உள்ள விசுவாசம் சோரம் போகாமல் இருக்க வேண்டுமாயின் அது செயல்களிற் பிரதிபலிக்க வேண்டும் என்பதே விடுதலை இறையியலின் வேண்டுகோளாக இருந்தது. செயலுருப் பெறாத இறை போதனை மனுவுருப்பெறாத கிறிஸ்து போன்றதே என விளக்கம் கொள்ளப்பட்டது. தர்க்கரீதியான கொள்கைகளைக் கடந்து தாற்பரியமான நடைமுறை ஈவுகளில் விசுவாசம் வாழப்படவேண்டும் என்பதில் இவ்விடுதலை இறையியல் கவனமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வறுமை காரணமாகவும், அடக்குமுறை காரணமாகவும், அநீதி காரண மாகவும், ஒடுக்கப்பட்டு உலக அரங்கில் ஓரங்கட்டப்பட்ட இலத்தீன் அமெரிக்க மக்களின் நடப்பு வாழ்க்கைச் சிக்கல்களுக்கு இவ்விறையியல் முன்னெடுப்பு விடைகூற முனைந்தது.** அனாவிம்-யாவேயை ஏழைகளின் கடவுளாகக் கண்டு கொண்டு கிறிஸ்துவை விடுதலை வீரனாக ஏற்றுக்கொண்டு திருச்சபையை மானுட விலங்கொடிக்கும் இறை கருவியாக அடையாளப்படுத்தி அன்றாட சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் கிறிஸ்து நிகழ்வு எவ்வாறு விடை பகர முடியும் என விளக்கம் தேடியது விடுதலை இறையியல். இவ் விறையியலாக் கம் கிறிஸ்தவனின் பணிக்கள வாழ்க்கைக்கு ஒரு வழி முறையை வகுத்துக் காட்டி அவனை அதன் ஒழுக்கில் வாழ அழைத்தது. விசுவாசம் வெறும் சத்தியப் பிரமாணங்களிலும் காகித ஏடுகளிலும் கட்டிக் காக்கப்படாமல் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும், அசைவிலும் செயற்பாட்டிலும் செய் காரியங்களின் வாழ்வாக மொழி பெயர்க்கப்பட வேண்டும். செயற்பாட்டிற்கு அழைக்கின்ற இவ்விசுவாச அறைகூவல் வெறுமனே மனிதனுக்கு 'வேலை' 'பணி' செய்கின்ற அழைப்பை மாத்திரம் வழங்குகின்றது எனக் கருதலாகாது. அதற்கு மேலாக இது ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியையும் சுயம் நோக்கித் திருப்பி ஓர் உள்ளார்ந்த ஆத்ம ஓட்டத்தை முதலில் தோற்றுவித்து சுயமனமாற்ற, சுயசுத்திகரிப்புச் சவாலுக்கு அழைப்பு விடுக்கின்றது. பின்பு அதிலிருந்து ஊற்றெடுத்துப் பாய்கின்ற ஆன்மீக சக்தியூற்றிலிருந்து உலகை நோக்கிய பணி உருப்பெறமுடியும். 'தன்னை மாற்றாமல் தரணியை மாற்ற முடியாது' என்பதை விடுதலை இறையியல் நன்கு உணர்ந்துள்ளது.

19ஆம் நூற்றாண்டில் வேகம் பெற்ற மா(ர்)க்ஸிஸத் தத்துவ வினாக் களுக்கும் விளக்கங்களுக்கும் பரந்த மனத்தோடு தன் காதுகளைத் திறந்து வைத்திருந்த விடுதலை இறையியல், இலத்தீன் அமெரிக்க உள்ளகப் புலத் தின் சமய, சமூக, பொருளாதாரப் பண்பு களுக்கு ஏற்றாற்போன்ற ஒரு காத்திர மான இறையியல் தேவையைப் பூர்த்தி செய்ய காலத்தின் மடியில் கருக் கொண்டதே இவ்விடுதலை இறையியல். பிறந்த நாள் முதல் இவ்விறையியலாக்க முனைப்புக்கள் உலகத்தின் கண்க ளைத் தன் பக்கம் ஈர்த்தது, பலரைக் கவர்ந்தது, சிலரை உறுத்தியது. 'ஏதோ

> இலத்தீன் அமெரிக்க உள்ளகப் புலத்தின் சமய, சமூக, பொருளாதாரப் பண்புகளுக்கு ஏற்றாற் போன்ற ஒரு காத்திரமான இறையியல் தேவையைப் பூர்த்தி செய்யக் காலத்தின் மடியில் கருக்கொண்டதே இவ் விடுதலை இறையியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தின் வளைவு ஒன்றிலே உலகின் உள்ளேயே உள்ள இன்னுமொரு வேற்று உலகத்தினரால் அவர் களுக்காக இயற்றப்பட்ட இறையியலை எல்லாக் காலத்திலும் எல்லா மக்களும் பிரயோகிக்க முடியாது' என்ற உண்மை தெளிவாக உணரப்பட்டதன் விளைவுகளில் ஓரங்கம் கொண்டு புறப்பட்டது. சூழ்நிலைப் பிரயோகம் இவ்விறையியலின் பலமாக இருந்தது, பயனாகவும் அமைந்தது.

இலத்தீன் அமெரிக்கர்கள் மாத்திரமல்லாமல் யார் யார் அம்மக்களைப் போன்றதொரு சமய சமூகப் பொருளாதார ஒழுக்கிலிருந்தார்களோ அவர்கள் அனைவருமே அம்மக்களோடு தம்மையும் சார்படையாளப்படுத்திப் பார்த்தார்கள். எனவே ஆபிரிக்க, ஆசிய, மூன்றாம் உலக நாட்டு மக்களும் விடுதலை இறையியல் முன்னெடுப்புகளிலும், முன்மொழிவுகளிலும் பேரார்வம் கொண்டனர். சமய, சமூக, பொருளாதார அடக்குமுறை, உரிமை மறுக்கப்பட்ட நிலை, ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட நிலை, வறுமைநிலை, அடிமைநிலை போன்ற விலங்குகளிலிருந்து விடுதலை வேண்டி நின்ற ஒரு கூட்டம் விடுதலையிறையியலைக் கரம்விரித்து வரவேற்பதில் ஆச்சரியம் இல்லை.

மேலெழுந்த ரீதியில் நோக்குகையில் இம்மூன்று கண்டங்களின் சமய, சமூக, பொருளாதாரப் பின்புலங்களும் ஒரே தோற்றுருவினைக் கொடுப்பினும் அவை தம்முள் சில வேறுபாடுகளையும் தம் புலத்திற்கே உரித்தான தனிப்பண்புகளையும் கொண்டிருக்கின்றன. விடுதலையிறையியல் தந்த வெளிச்சத்திலும் வேகத்திலும் தனித்தனிக் கண்டங்களும் ஏன் மண்டலங்களும் கூடத் தத்தமக்கென இறையியல் செய்யப்பட்டன. ஆபிரிக்காவிலே தோன்றிய '**கறுப்பு இறையியலையும்**' கிழக்காசியாவிலே தோன்றிய '**அரிசி இறையியலையும்**' இவ்வாறான இறையியலாக்கத்திற்கு உதாரணங்களாகக் காட்ட முடியும். தெற்காசியாவிற் குறிப்பாக இந்தியாவில் 70களுக்குப் பின்பாக ஓர் இந்திய நோக்கு இறையியல் முகிழ்ந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையின் கலாசாரம் இந்தியக் கலாசாரத்தைவிட வேறுபட்ட ஒன்றல்ல. இருப்பினும் நடப்புகளையும் வரலாற்றையும் அணுகிப் பார்க்கையில் இலங்கையின் எரிகின்ற பிரச்சினைகளுக்குப் புதியதொரு இறையியலாக்கம் தேவை என்பதை எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். இருப்பினும் இலங்கையில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க இறையியலாக்க முயற்சிகளிற் சிலர் நடப்புகளிலிருந்து எட்டத்தில் நின்றுகொண்டு இறையியல் செய்வதாக ஒரு குற்றச்சாட்டும் உண்டு. எண்ணிக்கையில் வெகுசொற்பமாக இருக்கின்ற இறையியலாக்க கர்த்தாக்கள் பேசப்படாத பல காரணங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக எரிகின்ற பிரச்சினைகளைத் தொட்டுப்பேசத் தயக்கம் காட்டினர் அல்லது பக்கம் சாய்ந்தனர். அடிப்படை இறையியல் தத்துவங்களைக் கற்றுக்கொண்டும் கற்பித்துக் கொண்டும், வாசித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கின்ற நிலையிலிருந்து இறையியலாக்கம் என்கின்ற அடுத்த கட்டத்திற்கான தேவை முன்னைவிடக் காத்திரமாக எழுந்துள்ளமை புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அதற்கான முயற்சிகளும் முடக்கி விடப்பட வேண்டியது கட்டாயம் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

தேவை எழுகின்ற போது வேகமும் விவேகமும் கட்டாய உள்ளீடுகளாக்கப்பட வேண்டும். விடுதலை இறையியலாக்கம் என்ற கோதாவிலே சில விரும்பப்படாத விதண்டாவாத அல்லது அடிப்படை இறையுண்மைகளிலிருந்து திரிபுபட்ட விளக்கத்தையும் வியாக்கியானத்தையும் சிலர் முன்வைத்துவிடவும் கூடும். தன் சுயவிருப்பு வெறுப்புகளைக்கடந்து இறை வெளிப்பாட்டு வெளிச்சத்தில் விளங்கிக் கொள்வதும் விளக்கிக் காட்டுவதுமே இறையியலாக்கத்தின் ஒழுக்காக இருக்க வேண்டும். மாறாக உணர்ச்சி வசப்போக்கும் பக்கம் சார்கின்றமையும் அரை வேக்காட்டு இறையியல் விளக்கத்திற்கே எம்மை இட்டுச் செல்லும். தூய ஆவியின் ஞான வெளிச்சத்தில் நடத்தப்பட்டு நடுநிலைமை தவறாது நாம் எடுக்கின்ற இறையியலாக்க முனைப்புக்கள் எம் நடப்பு நிகழ்வுகளிலிருந்து எழும் சவால்களுக்கும் வினாக்களுக்கும் நாம் கொண்டுள்ள விசுவாசத்தையே விடையாக மொழி பெயர்க்கும் வழியாக முன் மொழியும் என்பது நிச்சயம்.

> விடுதலை இறையியலாக்கம் என்ற கோதாவிலே சில விரும்பப்படாத விதண்டாவாத அல்லது அடிப்படை இறையுண்மைகளிலிருந்து திரிபுபட்ட விளக்கத்தையும் வியாக்கியானத்தையும் சிலர் முன்வைத்து விடவும் கூடும். தன் சுய விருப்பு வெறுப்புகளைக் கடந்து இறை வெளிப்பாட்டு வெளிச்சத்தில் விளங்கிக் கொள்வதும் விளக்கிக் காட்டுவதுமே இறையியலாக்கத்தின் ஒழுக்காக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கு வித்தான திவ்விய நற்கருணை

அருட்சகோ. ச. நெவின்ஸ் யோகராச்

## முன்னுரை

இன்று எங்கு பார்த்தாலும் 'விடுதலைக் கோஷங்கள்' ஒலித்துக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் மனித சமூகங்கள் விடுதலை வேண்டும், சுதந்திம் வேண்டும் என்று வீதி மறியலையும், கடை அடைப்புக் களையும், ஆயுதப் போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கின்றன. மறுபக்கத்திலே இயற்கை தனக்கு மனிதனிடமிருந்தும் அவனது இயற்கைக் கெதிரான அடாவடித்தனத்திலிருந்தும் விடுதலை வேண்டுமென்று தனது கோபத்தையும் குமுறலையும் ஆழிப்பேரலை (சுனாமி) என்ற உருவிலே வந்து மனிதனைத் தாக்கிக் கொண்டிருக்கின்றது. இப்படியாக விடுதலை என்னும் வேட்கை எங்கும் விரவிக் காணப்படுகின்ற வேளையிலே, எம்மை யெல்லாம் ஒரு முழுமனித விடுதலைக்கு அழைப்பு விடுக்கின்றார் எமது நற்கருணை ஆண்டவர்.

நற்கருணை, அன்பு, மன்னிப்பு, பகிர்வு, தியாகம், பணி என்று பல்வேறு பரிமாணங் களைக் கொண்டிருந்தாலும் அவற்றுக்குள் எல்லாம் 'விடுதலை' என்னும் கூறு இழை யோடிக் கிடக்கின்றது. நமது உடலின் உயி ருக்கும், மூச்சுக்கும், வாழ்வுக்கும்...... இதயத் துடிப்புக்கும் எத்தகைய நெருங்கிய தொடர்பு உள்ளதோ அதே போன்ற தொடர்பே நற்கரு ணைக்கும் விடுதலைக்குமிடையே உள்ள பிணைப்பு.

நற்கருணை, அன்பு, மன்னிப்பு, பகிர்வு, தியாகம், பணி என்று பல்வேறு பரிமாணங் களைக் கொண்டிருந் தாலும் அவற்றுக்குள் எல்லாம் 'விடுதலை' என்னும் கூறு இழை யோடிக் கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைச்சூழலில் உருவான நற்கருணை

பழைய ஏற்பாடு முழுவதும் விரவிக் காணப்படும் ஓர் இறையியல் கருத்தோட்டம் என்னவென்றால் 'கடவுளின் விடுதலைச் செயல்'. அதாவது இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலம் தொடக்கம், அவர்களை மோயிசன் தலைமையில் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்ற காலம் வரையும், அதன் பின்னர் இறைவாக்கினர் காலம் தொடக்கம் யேசுவின் காலம் வரை விடுதலை என்னும் வீரகாவியம் வரலாற்றில் இடம்பெற்றுக் கொண்டே இருந்தது.

> பழைய ஏற்பாடு முழுவதும் விரவிக் காணப்படும் ஓர் இறையியல் கருத்தோட்டம் என்னவென்றால் 'கடவுளின் விடுதலைச் செயல்.'

பாஸ்கா விழாவைக் கொண்டாடும்போது தந்தைக்கும், மகனுக்கும் இடையே பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது. "உங்கள் பிள்ளைகள் உங்களைப் பார்த்து இவ்வழிபாட்டின் கருத்து என்ன?" என்று கேட்கும்போது நீங்கள், "இது ஆண்டவரின் பாஸ்காப்பலி: அவர் எகிப்தியரைச் சாகடித்தபோது எகிப்திலுள்ள இஸ்ராயேல் மக்களின் வீடுகளைக் கடந்து சென்றார். இவ்வாறு நம் வீடுகளுக்கு அவர் மீட்பளித்தார்" என்று கூறுங்கள். *(வி.ப 12:26-27)*

இவ்வாறாக இஸ்ராயேல் மக்களின் விடுதலை அனுபவமானது படிப்படியாக பாஸ்கா விழாவாக உருப்பெற்று அவர்களின் தேசியதினமாக மிகவும் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இறைவனின் அருளால் தம் மக்களின் அடிமைச் சங்கிலிகள் உடைத்தெறியப்பட்டதையும், தமக்கென்று ஒரு தேசத்தையும், சமய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பெற்றுக் கொண்டு இதன்மூலம் அரசியல் பொருளாதார விடுதலையைச் சுவைத்ததையும், இவ்வாறு 'யாவே' இறைவனின் அளப்பரிய அன்பைப் பெற்றுக் கொண்டதையும் கொண்டாடி மகிழ்ந்தனர். இத்தேசிய விழாவானது நிகழ்காலத்திலே தங்களை அடிமைப்படுத்திய கிரேக்க, அல்லது உரோமையரின் ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலை வேட்கையுடன் போராடத் தூண்டி நின்றது.

## நற்கருணை ஒரு புதிய விடுதலைப் பயணம்

"யேசு அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, அதைப்பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, "இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அவர்களுக்குக் கொடுத்து, இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்.'' *(மத். 26: 26-28)*

பழைய ஏற்பாட்டில் விடுதலை உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்த அதே பாஸ்கா விருந்தைத்தான் யேசு தமது இறுதி உணவாகச் சீடர்களோடு கொண்டாடி மகிழ்ந்தார். இவ்வாறு உருக்கும் உணர்வுகளோடு யேசு கலந்து கொண்ட அவரது இறுதிப் பாஸ்கா விருந்தே முதல் நற்கருணை விருந்தாக அமைந்தது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் கொண்டாடிய பாஸ்கா விழா தங்களின் அரசியல் விடுதலையை மாத்திரம் மையப்படுத்தியதாக இருந்தது. இவர்கள் எகிப்தை விட்டுப் புறப்படுவதற்கு முன் மோயீசன் தங்களுக்குக் கட்டளை இட்டபடி தமது பாஸ்கா உணவைப் புளியாத அப்பத்துடனும் காட்டுக் கீரையுடன் விரைந்து உண்டனர். தமது குடும்பத்திற்குத் தேவையான ஓர் ஆட்டுக் குட்டியைத் தேர்ந்தெடுத்து அதன் இறைச்சியை உண்டனர், அதன் இரத்தத்தைக் கதவின் மேற் சட்டத்திலும், இருநிலைகளிலும் கிண்ணத்தில் இரத்தத்தையும் பூசினர்...... *(வி.ப. 12:21-28)*

பழைய ஏற்பாட்டில் விடுதலை உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்த அதே பாஸ்கா விருந்தைத் தான் யேசு தமது இறுதி உணவாகச் சீடர்களோடு கொண்டாடி மகிழ்ந்தார்.

ஆனால், புதிய பாஸ்கா விருந்திலே, யேசு தன்னையே செம்மறியாகப் பலியாக்கி, தனது இரத்தத்தைச் சிந்தி முறிபட்டிருந்த உடன்படிக்கையை மீண்டும் புதுப்பித்தார். இப்புதிய பாஸ்கா விழாவானது வெறுமனே அரசியல் விடுதலையை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த முழு மனித விடுதலைக்கு வித்தாகி நிற்கின்றது. யேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது எல்லாவிதமான அடிமைத்தனத்திலுமிருந்து மனிதனை மீட்டெடுக்கத் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவரது மரணம் ஓர் அரசியற் படுகொலை என்று சொல்லுமளவிற்கு இவர் பொய்க் குற்றம் சுமத்தப்பட்டுச் சிலுவையிலே மரிக்க நேரிட்டது. மனித குலத்தை மீட்டெடுக்க அவர் மேற்கொண்ட பயணம் அவரோடு முடிந்துவிடவில்லை. மாறாக இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**' *(லூக் 22:19)*

இவ்வாறு யூத மக்களின் உரிமைச் சொத்தாக மட்டும் இருந்துவந்த பாஸ்கா விழாவின் விடுதலை, அகில உலகினருக்கும், அனைத்து மக்களுக்கும் உரிய விடுதலையாக விரிவு பெறுகிறது.

## சமூக விரோத அமைப்பிலிருந்து விடுதலை

நற்கருணைக் கொண்டாட்டமானது, பல்வேறு சமூக விரோத அமைப்புக்களுக்குச் சவாலாக அமைந்துள்ளது. நற்கருணை விருந்திற் பங்கு கொள்கின்ற அனைவரும் ஒரே அப்பத்தைப் பகிர்ந்து, ஒரே கிண்ணத்தில் அருந்தி உறவிலும் ஒருமைப்பாட்டிலும் வாழ அழைக்கப்படுகின்றார்கள்.

'**அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்**' *(1 கொரி 10:17)*

ஆகவே சமூக ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் எதிராக இருக்கின்ற, செயற்பட்டு வருகின்ற மனித விரோத அமைப்புக்களுக்கு எதிராகப் போராட (Negating the Negation) நற்கருணை அழைத்து நிற்கின்றது. மேலும் பரந்துபட்ட இயல்பு கொண்ட நற்கருணையானது சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றது, தனிமனித நலன்களை அல்ல பொது நலனைத் தூக்கி நிறுத்துகின்றது. 'அதிகாரப் பகிர்வால், விளிம்புகளில் உள்ளவர்கள் மையத்திற்கு வருவதற்கான தோழமை உணர்வை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு நற்கருணையானது அதன் அடையாளப் பண்புகளைப் பிரதிபலிக்கும் இறையாட்சி சமூகத்தை உருவாக்குகின்றது.

> ஆகவே சமூக ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் எதிராக இருக்கின்ற, செயற்பட்டு வருகின்ற மனித விரோத அமைப்புக்களுக்கு எதிராகப் Nghuhl (Negating the Negation) நற்கருணை அழைத்து நிற்கின்றது.

## அரசியல் பொருளாதார விடுதலை

மனித குலம் முழுவதுமே இன்று ஏதோ ஒரு வகையில் அரசியல் பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டி ஏங்கி நிற்கின்ற வேளையிலே, இவற்றிற்கு விடை கொடுக்கும் வகையில் யேசுவின் தற்கையளிப்பும், தியாக வாழ்வும் நற்கருணை என்னும் வடிவிலே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவின் அரசியல் விடுதலை என்பது நீதியிலும் சமத்துவத்திலும் இருந்து புறப்படுவது. யேசு எமக்கு விட்டுச் சென்ற நற்கருணை நீதியின் பிரசன்ன மாகும். கிறிஸ்து நிகழ்வு கடவுளின் நீதி ஷயை மீண்டும் வெளிப்படுத்தும் செய லாகும். ( உரோ 3:25-26)

இத்தகைய புரட்சி உணர்வுகளை யும், விடுதலை உறவுகளையும் கிளர்ந் தெழச் செய்த பாஸ்கா விருந்தைத்தான் யேசு தமது இறுதி உணவாகக் கொண் டார். ஆகவே யேசுவின் திருவிருந்திலே தகுதியோடும் விசுவாசத்தோடும் பங்கு கொள்ளும் எம்மையெல்லாம் இவ்வாறான விடுதலைக்காகப் போராட அழைத்து நிற்கின்றது.

**"பசியாய் இருந்தவர்களைக் கண்டு அவர்களுக்கு உணவு கொடுத்த போது என்னைப் புனிதன் என்றார்கள். நீங்கள் ஏன் பசியாய் இருக்கின்றீர்கள்? என்று கேட்டபோது, என் னைப் பொது உடைமை வாதி (Communist) என்கிறார்கள்." பேராயர் கெல்ட கமேரா -**

**"நீதியை நாடித் தேடுங்கள். ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள். திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள். கைம் பெண்ணுக்காக வழக்காடுங்கள்"**

(ஏசா. 1:17, 58:6-7)

## உள்ளார்ந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

இன்று ஒவ்வொரு மனிதனையும் அடிமைப்படுத்துகின்ற மிகப் பெரும் சக்தியாக இருப்பது அவனின் அகம் - (உள்ளம்). மனிதன் போராடி களைய வேண்டிய அடிப்படை அடிமைத்தனம் புறத்திலே இருப்பதைவிட அகத்திலேதான் தீவிரமாக உள்ளது.

மனிதர்கள் மற்றவர்கள் மட்டிலே தங்களுக்குள் வளர்த்துக் கொள் ளும் வெறுப்புக்கள், விரோதங்கள், குரோதங்கள் இன்னும் தங்களுக்குள்ளேயே ஏற்படுத்திக் கொள்கின்ற தாழ்வு மனப்பான்மை, குற்றப்பழி உணர்வுகள், தீராத பேராசை, திருப்திப்படுத்த முடியாத போதை வெறி சாதிய ஏற்றத் தாழ்வுகள் இவ்வாறாக உள்ளும் புறமும் மனிதர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற போது, இறைவன் தனது இதயத்தைத் திறந்து காட்டும் வகை யில் தனது அன்பையும், மன்னிப்பையும் நற்கருணையிலே தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கிறிஸ்து - நிகழ்வு ஒரு நிறைவான பலியாகிறது. (எபி 7:27) இதன்மூலம் நாம் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுகிறோம். (மத். 26:28) (உரோ. 5:9) இது கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குகிறது. (2 கொரி 5:17) நமக்கு விடுதலை தருகின்றது (எபே.1:17)

இவ்வாறு மனிதரை உள்ளூரப் பாதித்து அவர்களை ஊனமாக்கும் தீயசக்திகளிடமிருந்து யேசு விடுதலை அளிக்கிறார். வாழ்விலே பல்வேறு இழப்புக்களாலும், இடப்பெயர்வுகளாலும் சோர்வடைந்து நம்பிக்கை இழந்து நலிந்து போன மக்களுக்கு, 'உன் நம்பிக்கை உன்னை குணமாக்கியது' (மாற் 5:34, 10:52) 'நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்' (மாற் 9:23) என்று கூறி அவநம்பிக்கையிலிருந்து விடுதலை அளித்து மக்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்றுகிறார்.

## முடிவுரை

கிறிஸ்து நிகழ்வு என்பது, யேசுவின் சவால் மிக்க வாழ்க்கையாலும், போதனையாலும் முழு மனித விடுதலை நோக்கிய அவரது செயற்பாட்டாலும் அவருக்குக் கிடைத்த பரிசான மரணமும் உயிர்ப்புமாகும். பிறரின் சமூக அவல நிலையை மாற்ற, பொருளாதார அரசியல் அடிமை நிலையிலே சுயமரியாதையும் மனித மாண்பும் மறுக்கப்பட்டு இருந்த மக்களின் நிலையை மாற்ற ஏற்பட்ட போராட்டத்திற்குக் கிடைத்த பரிசே சிலுவைச் சாவும் அதைத் தொடர்ந்து வந்த உயிர்ப்புமாகும். கிறிஸ்து - நிகழ்வாக விழங்கும் நற்கருணை எமக்குத் தரும் பாடம் இதுவாகும்.

எனவே, நற்கருணையில் இருக்கும் யேசுவின் உடனிருப்பு வெறுமனே பக்திக்கும் பரவசத்திற்கும் ஆராதனைக்கும் மாத்திரம் எம்மை அழைத்து நிற்கவில்லை. மாறாக இறையாட்சியின் இலட்சியப் பணிக்காகவும் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியும் விடுதலைப் பணிக்காகவும் நம் எல்லோரையும் அழைத்து நிற்கின்றது.

**"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்."** *(யோவா. 12:24)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பிறருக்காக வாழ்வைக் கொடுப்பவர்கள் புதிய வாழ்வுக்குப் பிறக்கின்றனர். நற்கருணையில் இருக்கும் யேசுவின் உடனிருப்பு. அன்பிலும், தொண்டிலும், தியாகத்திலும் வெளிப்படும் உடனிருப்பு. இறையாட்சிக்கு எதிரான சக்திகளையெல்லாம் வீரத்தோடு எதிர்த்து போராடி விழுப்புண்ணும் வீரமரணமும் அடைந்த உடைக்கப்பட்ட உடனிருப்பு. எனவே, நற்கருணையில் இருக்கும் யேசுவின் உடனிருப்பு வெறுமனே பக்திக்கும் பரவசத்திற்கும் ஆராதனைக்கும் மாத்திரம் எம்மை அழைத்து நிற்கவில்லை. மாறாக இறை யாட்சியின் இலட்சியப் பணிக்காகவும் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியும் விடுதலைப் பணிக்காகவும் நம் எல்லோரையும் அழைத்து நிற்கின்றது.

## உசாத்துணை நூல்கள்

- திரு விவிலியம்
- உடைந்து உருக்கொடுக்க
- மறை அருவி
- அரசியல் இயேசு
- Jesus Before Christianity
- Christology at the Cross Road


**அடுத்து வெளிவர இருப்பது**

குருமடத்தின் வெள்ளி விழாவையொட்டிய

**"சிறப்பிதழ்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியலாளர் இவ்விதழில் 18

அருட்சகோ. சூ. மில்ரன் தேவராஜ்

# புனித அன்செல்ம் (1033 – 1109)

புனித அன்செல்ம் இத்தாலியில் பியட்மொண்டிஸ் ஒஸ்ரா எனும் ஊரில் 1033ல் பிறந்தார். இவர் 15 வயதாக இருக்கின்றபோது அவருடைய தாய் இறந்து விட்டார். இதனால் தந்தையிடமிருந்து பல கட்டுப்பாடுகளை எதிர் கொள்ள வேண்டி வந்ததால் அவர் தந்தையை விட்டு பிரிந்து மூன்று வரு டங்கள் பேர்கண்டியிலும், பிரான்சிலும் தன் வாழ்வை கழித்த பின் நோர்மண்டி வந்து அங்கே பிரபல்யமாக விளங்கிய லான்பிராங் என்ற சந்நியாசியால் கவரப்பட்டு அவருடைய சீடரானார். இவர் 1060ல் தன்னுடைய 27வது வயதில் சந்நியாசி மடத்தின் பூர்வாங்க சந்நிசியாக ஏற்று கொள்ளப் பட்டார். பின்னர் 1078ல் இம்மடத்தின் அதிபதியானார். இங்கிருந்து அவர் பலமுறை இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார். இவருடைய நேரிய வாழ்வாலும், தியாக சிந்தையாலும் இங்கிலாந்து மக்களின் கவனத் திற்கு ஆளாகி அதன் பிரகாரம் 1093ல் கன்ரர்பரியின் பேராயர் ஆனார். இவர் திருச்சபையின் அதிசிறந்த மறை வல்லுனராகவும் விளங்கினார். அவருடைய பல மறை நூல்களும் வேலைப்பாடுகளும் இன்னும் திருச் சபையின் பொக்கிஷமாக விளங்குகின்றன.

புனித அன்செல்மினுடைய மறைநூல்களை நோக்குகின்றபோது இறை யியல் சம்பந்தமாக சொற்பமாகக் காணப்பட்டாலும் அவை மிகவும் ஆழமான வையாக, சிறந்த சிந்தனைக் கருத்துக்கள் கொண்டவையாக காணப்படு கின்றன. அவ்வாறான மறை நூல்களை பின்வருமாறு வகுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அ) கிறிஸ்தவ மெய்யியல்

அளவையில் பிரயோகம் (De Grammatico) இது சாதாரண அரிஸ் டோட்டலின் அளவையியல் சம்பந்தமான கருத்தையும், De Veritate உண்மை எனும் நூலில் அன்செல்ம் "கடவுள்" ஒருவரே உண்மையென்றும், படைக் கப்பட்ட அனைத்துப் பொருட்களிலும் ஓரளவு உண்மையே உள்ளது (Partial truth) முழுமையான உண்மை கடவுளிடமே உள்ளது என்றும் மற்றும் De libero arbitrio என்ற உரையாடல் மூலம் மனித சிந்தனைகளையும் (Free will), ஒழுக்க நடவடிக்கைகளையும் (Moral acts) கொண்ட உரையாடலாக உள்ளது.

## (ஆ) கடவுளை பற்றிய நூல்கள்

இங்கே புனித அன்செல்ம் The Monologion வழியாக கடவுளுடைய தெய்வீகத் தன்மையையும், திரித்துவத்தைப் பற்றியும் எடுத்தியம்பியுள்ளார். மேலும் கடவுளே எல்லா நன்மைத்தனமும், மாசு மறுவற்ற உயிரும் என்றும் வார்த்தையானது (Word) தெய்வீகமானது என்ற இறையியலை முன்வைத்து இந்த தெய்வீக சொல்லிலிருந்து (Divine Word) அவர் மகனை படைத்தார் என்றும் மற்றும் தூய ஆவியானவர் இந்த கடவுளின் சொல்லிருந்தும் அன்பிலிருந்தும் புறப்படுகின்றார் என்றும், இவை முறையே மூவொரு கடவுள் (Trinity) என்ற கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றார்.

மேலும் The Proslogion வழியாக அன்செல்ம் ஒரு முக்கிய கருத்தை முன்வைக்கின்றார். அதாவது கிறிஸ்தவர்கள் கடவுளுடைய "இருப்புத் தன்மையை" அவர்களுடைய தியானத்தாலும் செபத்தினாலும் நிரூபிக்கலாம் என்கின்றார். இங்கே அவர் செபத்தை (Prayer) முன்னிலைப்படுத்தி இதன் வழியாக மனிதன் தனது சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஒளியை பெற்று அதன்மூலம் அவன் கடவுளுடைய இருப்புத்தன்மையை அறியமுடியும் என் கின்றார். இன்னும் The De Concordia வழியாக கடவுளுடைய ஆளுகையை யும் (Sovereign), சுதந்திரத்தையும் மையப்படுத்தியுள்ளார்.

## (இ) பரிசுத்த திரித்துவம் சம்பந்தமான நூல்கள்

The De fide Trinitatis வழியாக அன்செல்ம் நம்பிக்கையை முக்கியத் துவப் படுத்தியுள்ளார். மேலும் 'திரித்துவத்தின் தன்மையையும்,' 'ஆள்தன்மை (Nature and Person) என்பவற்றையும் திறமையாக வகுத்துள்ளார். மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The De Processione Spiritus Sancti Contra Graecos மூலம் அவர் ஒரு வித்தியாசமான கருத்தை முன்வைக்கின்றார். அதாவது தூய ஆவியானது தந்தையிடமிருந்து மட்டுமல்லாமல் மகனிடமிருந்தும் உருப்பெறுகின்றார் என்றும் காலப்போக்கில் இதை அன்செல்ம் முழுமையாக நிரூபிக்கவில்லை.

## (ஏ) சாத்தானைப் பற்றியும் மீட்பைப் பற்றியும்

De Casu diaboli வழியாக அன்செல்ம் கூறுகையில் எல்லாத்தீமைகளினது ஆரம்பமானது முதல் வானதூதர்களின் வீழ்ச்சியிலிருந்துதான் என்றும் The Cur Deus Homo வழியாக முதன்முதலில் மீட்பைப் பற்றிய நூல் அன்செல்ம்தினால் வகுக்கப்பட்டது. இங்கே அன்செல்ம்ற்கும் அவருடைய சீடராகிய பொஸ்சோவுக்கும் இடையிலான இரண்டு உரையாடல்கள் உள்ள புத்தகங்கள் உள்ளன. அதில் முதலாவது புத்தகத்தில் "மனிதன் தன்னால் தன்னை ஒருபோதும் மீட்க முடியாது என்றும்" இரண்டாவதில் "மனிதன் கடவுளால் மட்டுமே மீட்படைய முடியும் என்றும்" கூறி நிற்கின்றார்.

இவ்வாறாக இவர் உண்மையான சுதந்திரமான சிந்தனையாளராக கருதப்பட்டபடியால் இவர் கிறிஸ்தவ மெய்யியலின் தந்தையெனவும் போற்றப்பட்டார். இவரின் மெய்யியலின் நூல்கள் மட்டுமல்லாமல் ஆன்மீக சம்பந்தமான படிப்பினைகளும் மிகவும் ஆழமான இறையியலையும் கொண்டுள்ளது. அவர் கடவுள் மீது கொண்ட பக்தியானது மிகவும் நேரியதும் உண்மை யானதுமாகும். இவர் தன் வாழ்நாளில் செபத்தின் மீது மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். இதன்படி செபமானது கடவுளுடைய அன்பின் வெளிச்சம் (Prayer is a Flame of the Love) என்று நிரூபித்து நிற்கின்றார். இவ்வாறாக இவருடைய பல்வேறுபட்ட போற்றத்தக்க பங்களிப் பின்படி 1920ம் ஆண்டு திருச்சபையானது இவரை திருச்சபையின் மறைவல்லுனராக பிரகடனப் படுத்தியது.

> அவர் கடவுள் மீது கொண்ட பக்தியானது மிகவும் நேரியதும் உண்மை யானதுமாகும். இவர் தன் வாழ்நாளில் செபத்தின் மீது மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். இதன்படி செபமானது கடவுளுடைய அன்பின் வெளிச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனில் இளைப்பாற இறைஞ்சி

அருட்சகோ. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

அகல் ஒன்று அணைந்துவிட்டது
ஆயிரமாயிரம் அகல்களுக்கு
நெய் வார்த்து நெடும் பயணம் புரிந்த – எம்
நேசத்தலைவர் இனி இங்கே மீளாத்துயிலில்
நாமோ நெஞ்சில் ஆழத்துயரில் ......

பெருங்கப்பல் திருச்சபையை
ஈர்பத்தாறு வருடங்களாய்
பெருங்காற்று சுனாமியிலும்
இனிதே நடப்பித்த – எம்
பெருந்தந்தை கண்மூடினார்.
கனக்கும் இதயத்துடன்
கண்ணீர் அஞ்சலிகள் இத்தால் .....

சிறியோரையும் இளையோரையும்
வளர்ந்தோரையும் பெரியோரையும்
ஒட்டு மொத்த உலகையுமே – தன்
வசீகரத்தால் வளைத்துப் போட்ட
வனப்பு இன்று (உலக) வாழ்க்கையை நிறுத்தி
நுழைந்ததே பேரின்ப நித்தியத்தில் .....

அமைதியின் தேவன் – தன்
அடைக்கல நகரிலே
அமரத்துவமடைந்த பாப்பு – எம்
இரண்டாம் அருள் சின்னப்பருக்கு
நித்திய ஈடேற்றத்தை நல்கிட
எம் உள்ளத்து வேண்டுதல்கள்
இறைவன் பால் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பற்றிய சில வாழ்க்கை குறிப்புக்கள்

1. 265 ஆவது பாப்பரசர் 16ம் பெனடிக்ற்
இயற் பெயர்:– ஜோசப் ரட்ஸிங்கர்

2. 11ஆம் நூற்றாண்டின் பின்னர் ஜேர்மனியில் இருந்து பாப்பரசராகத் தெரிந் தெடுக்கப்பட்ட முதல் கர்தினால்

3. 1927ஆம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி ஜேர்மனியிலுள்ள மாக்ரல் அம் இன்னில் (Marktl am Inn) பிறந்தார்.

4. 1946 – 1958 வரை (Munich) பல்கலைக்கழகத்தில் இறையியல் தத்துவ யியல் கல்வியைக் கற்றார்.

5. கத்தோலிக்க திருச்சபையின் இறையியல் வல்லுநரும், கோட்பாடுகளின் தந்தையுமாவார்.

6. 1981ஆம் ஆண்டு முதல் விசுவாச மறைக்கோட்டு ஆணைக்குழு செயல கத்தின் தலைவராகவும் செயற்பட்டு வந்தார். இவர் 10 மொழிகளில் பாண் டித்தியம் பெற்றவர்.

7. தனது 14 ஆவது வயதில் ஹிட்லரின் இளைஞர் குழுவில் கட்டாயமாய் இணைக்கப்பட்டார்.

8. 1945 ஜேர்மானிய ராணுவத்தை விட்டு விலகியபோது யுத்த கைதியாக சிறையில் அடைக்கப்பட்டார்.

9. நாசிசவாத கொடுமைகளின்போது பட்ட அனுபவத்தால், திருச்சபை உண் மைக்கும் நீதிக்கும் துணிந்து குரல் கொடுக்க வேண்டும் என நம்பினார்.

10. 1977ஆம் ஆண்டு திருத்தந்தை 6ம் சின்னப்பர், இவரை மீயூனிச் நகர கர்தினாலாக தெரிவு செய்தார்.

11. கால் நூற்றாண்டாக மறைந்த பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுலின் நெருங்கிய உதவியாளராகவும், திருச்சபை கோட்பாடுகளின் பாதுகாவல ராகவும் செயற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## The Pontificate of Pope John Paul II

The article speaks about Pope John Paul II who completed his earthly life and his mission given by God to "Feed His sheep" very well with the grace and help of God. During the last 26 years he led the Catholic Church away from all dangers and specially he highlighted Justice, Peace, and Human Dignity in all circumstances. He is not only a spiritual leader of over one billion Catholic faithful but also a recognised leader for others.

His witnessing life and the enduring service clearly reveal his unshaken deep faith in God and his mission oriented zeal. He was always in search of the suffering people, the marginalized and afflicted. He knew no distinction of any race, language and religion.

He was a man of simplicity, humility, service and charity. His thirst for peace unity and justice were always clearly evident in his letters, encyclicals and speeches. Therefore, the whole article clearly shows the greatness of the man, Pope John Paul II who needs to be emulated.

**Rev. Bro. E.Edwinathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Liberation Theology- its emergence, challenges and inspiration

Liberation theology emerged out of faith experience of poverty, struggles, suffering and hope of the poor people of God. In the Post Vat. II church, Liberation theology and the Basic Ecclesial Community (BEC) are considererd as the very special contribution of the Latin American Church. Liberation Theology has come of an age in the history, by facing challenges from CIA and other western conservative theologians and finally through the witness of martyrdom. This unique faith-experience of the Latin American Church in the turmoil period history of the people has consolidated other Third World churches and inspired many contextual theologies and also enriched the theological contribution of third world theologians. In this context the emergence of Dalit theology in India is seen as a great contribution in the field of theology. The article analyses the history of liberation Theology- its emergence, challenges and inspiration.

Rev . Fr. S.F. Kirupananthan

# The Liberation Theology and its implications to our Life

In recent years Catholic spirituality evolves with the search for a spirituality of the laity which culminates in the studies on the religious value of the profane and in the spirituality of the activity of the world.

In the Incarnation of the Eternal Word, not only the mystery about God but also about man is revealed. This was the emphasis of the 2nd Vat. Council as well. In the aftermath of the Council there in the continent of South America emerged a theology that had socio political reference of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

context. While appreciating the theological literature of the past the new endeavour of 'liberation theology' took up 'theology form below' as its methodology.

Welcomingly people from all over the world particularly form the continents of Africa and Asia identified themselves with the underprivileged mass of South America and contributed to launch such theology. To keep pace with the regions and countries in Sri Lanka too, though few in number, there were initiatives to launch such theology. But for unclear reasons those efforts look either irrelevant or unfocussed on the very issues which are to be the context for such theology.

Every believer has to undertake the mission to view theology for his/her situation. Any such efforts that is based on the Revelation and guided by the Holy Spirit would enable our faith to be relevant for our time and answer for our quest.

**Rev. Fr. S.P. Jeyanthan Pachchek OMI**

# The Eucharist is a seed of Liberation

"The Eucharist belongs to that Hour, to Christ's hour of redemption in the history of humanity and of the world." Pope John Paul 11.

The Eucharist has various elements in itself, namely sacrifice, sharing, conviction, commitment etc., but among all these elements, there is a very important aspect that is nothing but liberation. Therefore, the relationship between the Eucharist and liberation can never be separated. The Eucharist is not only a symbol of liberation of the human person but also the source and strength that lead the person to sacrifice himself for the liberation of the human person.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hence basically the Eucharist gives the answer to the question How to be a true Christian in a world full of misery and injustice? The answer can be expressed in this way:

By living our faith in such a way that it becomes a liberating element in society.

"Greater love has no man than this that a man lay down his life for his friends." (Jn 15:13)

**Rev. Bro. Nevins Yogaraj Pieris**

**அன்பான வாசக நெஞ்சங்களே!**

எங்கே உங்கள் விமர்சனங்கள்
காலம் தாமதியாது எமக்கு எழுதி
அனுப்புங்கள்
இறையியல்சார்பான
தெளிவின்மைகள் உங்களிடு
உண்பா? எழுதி அனுப்புங்கள்
விடைகள் உங்களிடுத்
தெரியப்படுத்தப்படும்.

**நிர்வாகக் குழு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இனிய இறையியல் கோல வாசகர்களே ......

கடந்த ஆண்டுக்கான சந்தா செலுத்தாதவர்கள் அதற்கான ஆண்டுக் கட்டணம் 100/- ரூபாவை, தங்களின் முகவரி பதிவெண்ணுடன் தயவு செய்து அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
இறையியல் கோலங்கள்,
புனித. சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

நீங்கள் உங்கள் சந்தாவைக் காசுக்கட்டளையாகவோ (Monery Order) அல்லது பணமாகவோ அனுப்பி வைக்கலாம்.

உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எமது இறையியல் கோல வளர்ச்சிக்கு எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நன்றி.

நிர்வாகக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவரின் பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

..............................

..............................

**இடமிருந்து வலம் :**

1. மத்தேயு, லூக்கா நற்செய்திக்கு ஆதார நூலாக விளங்கிய நற்செய்தி (3)

4. _____ மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார். (3)

8. <u>இதன்</u> தனிச்சிறப்பே மகிழ்ச்சி (வலமிருந்து இடமாயுள்ளது (3)

19. இறை உறவின் பிறப்பை இதுவாகக் கொண்டு வளர்வது தான் கிறிஸ்தவ குடும்பம் (வலமிருந்து இடமாயுள்ளது) (4)

25. என் மைந்தன் ______ ஊழியன் (5)

31. குழந்தை இப்படியானது (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேலிருந்து கீழ் :*

1. இயேசுவின் மீட்பு இவ்வுலக ____ அனைவருக்கும் உரியது (4)

2. ஒற்றுமையின் எதிர்ச்சொல் குழம்பியுள்ளது (4)

6. யோவான் நற்செய்தியில் 1:14 தவிர இயேசுவின் இந்தப் பருவ விவரணங்கள் வேறில்லை (4)

11. அழுது கொண்டு ______ மனிதன் சிரித்துக் கொண்டே சாக ஆசிக்கிறான் (குழம்பியுள்ளது) (5)

16. நாடகத்தை தற்போது இவ்வாறு அழைப்பர் (குழம்பியுள்ளது) (4)

☞ விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.

☞ விடைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் யூன். 10, 2005.

## முகவரி குறுக்கெழுத்துப் போட்டி

**இல. 18. இறையியல் கோலங்கள்,**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**

**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 17

## சரியான விடைகள்:

**இடமிருந்து வலம்**

01. சுற்றுமடல்
02. சவுல்
19. பரி
32. தெய்வீகம்

**மேலிருந்து கீழ்**

1. சுயசரிதை
4. மறுவடிவம்
5. வீடற்றவர்
6. கடமைகளில்
8. பவுல்
26. தெரு

*பரிசில் பெறுவோர்*

*1ம் பரிசு : செ. மரிய பஜினோ றியோ, செ ன் ஜேம்ஸ் வீதி, இளவாலை.*

*2ம் பரிசு : து. நிவேதனா, ஞானப்பிரகாசர் வீதி, மல்வம், உடுவில்.*

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 16

## சரியான விடைகள்:

**இடமிருந்து வலம்**

01. வேதசாட்சி
23. மறை அருவி
31. தோட்டவெளி

**மேலிருந்து கீழ்**

1. வேதனை
5. சிறிய மணி
6. ஒல்லாந்தர்
9. அகியா
19. தோல்வி
26. பீட

*பரிசில் பெறுவோர்*

*1ம் பரிசு : யா. பிரகாஸ், இல. 36 ஆனந்தம் பண்ணை D,8 உருத்திரபுரம், கிளிநொச்சி.*

*2ம் பரிசு : வே. சகாயரூபி, சதாசகாயமாதா கோவில், துன்னாலை, கரவெட்டி.*

*3ம் பரிசு : எம். நிசாந்தினி, செ ன். தோமஸ் லேன், பருத்தித்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S. $ 10
Euro 8

தனிப் பிரதி 30/=

தொடர்பு கொள்க :
இறையியல் கோலங்கள்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482
021 222 7145

# IRAI IYAL KOLANGAL

**A Tamil Theological Quarterly**

**Annual Subscription : Local (Incl. postage) Rs. 100/=**
**Foreign (Incl. postage) US $ 10**
**Euro 8**

**Single Copy Rs. 30/=**

Correspondence to:
Irai Iyal Kolangal
St. Francis Xavier's Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.
Tel : 021 222 2482
021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by- A.C.M Press, No. 464, Hospital Road, Jaffna.